Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 216

வியாழக்கிழமை
30 ஜூன் 2022

ஆனி 16 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16
விலை : ரூ. 50

## காணாமல் போனவர் சடலமாக மீட்பு

வவுனியா, ஜூன் 30

வவுனியா, குடியிருப்புக்குளத்துக்கு அருகிலுள்ள பொதுச் சந்தையின் பின்புறம் ஆண் ஒருவரின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

மகாறம்பைக்குளம், கண்ணன் கோட்டத்தைச் சேர்ந்த மூக்கன் சஜீவன் (வயது-38) என்ற குடும்பஸ்தரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த சனிக்கிழமை காலை வீட்டிலிருந்து வெளியேறியிருந்த நிலையில், வீட்டுக்குத் திரும்பவில்லை. இது தொடர்பாக கடந்த திங்கட்கிழமை உறவினர்கள் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்திருந்தனர். இந்த நிலையில் அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் மீட்கப்பட்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வவுனியா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ-எ-110)

## பெண்ணின் உயிரை கருக்கிய பெற்றோல்!

திருகோணமலை, ஜூன் 30

வீட்டில் சேமித்து வைத்திருந்த பெற்றோல் தீப்பிடித்ததால் குடும்பப் பெண் ஒருவர் தீயில் எரிந்து பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் திருகோணமலை 15

எரிபொருள் தட்டுப்பாட்டால்

## குழந்தையைப் பிரசவித்த தாய் வீடு திரும்ப முடியாது அந்தரிப்பு

தென்மராட்சி, ஜூன் 30

குழந்தை பிரசவித்த தாய் ஒருவர், வீடு செல்வதற்கு வாகனங்கள் கிடைக்காது பல மணி நேரம் வீதியோரத்தில் காத்திருக்க நேர்ந்த சம்பவம் சாவகச்சேரியில் நேற்று முன்தினம் நடந்துள்ளது.

குழந்தை பிரசவித்த 15

# ஜூலை 22 வரை எரிபொருள் வராது!

நெருக்கடி இன்னும் தீவிரமாகும்
குறைந்தளவு எரிபொருளே கையிருப்பில்

கொழும்பு, ஜூன் 30

ஜூலை மாதம் 22 ஆம் திகதிவரை பெற்றோல் கப்பலை நாட்டுக்கு வரவழைக்கும் இயலுமை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு இல்லை என பிரதமர் அலுவலகத்தின் தலைமை அதிகாரி சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார். 15

## தொடரும் துப்பாக்கி சூடுகள்!

நேற்றும் இருவர் சாவு!

கொழும்பு, ஜூன் 30

மொரட்டுவ, கட்டுப்பெத்த சந்தியில் நேற்று முற்பகல் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்த மாதத்தில் கொழும்பு உட்பட நாட்டின் பல இடங்களில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

களனி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலேயே அதிக துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நடந்துள்ளன. பாதாள உலகக் குழுக்களுக்கு இடையே ஏற்பட்டுள்ள மோதல்களே 15

முச்சந்தி முரளி



"கப்பல் ஒண்டும் வராதெண்டால் இனிமேல் உந்த மோட்டார் சைக்கிள்களை பழைய இரும்புக்குத்தான் போடோணும் போல..."

## அடுத்த வருடம் வரையும் பணம் அச்சிடவுள்ள அரசு

கொழும்பு, ஜூன் 30

அடுத்த ஆண்டு முதல் பணம் அச்சிடும் நடவடிக்கை நிறுத்தப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 15

## மத்தியவங்கி ஆளுநரின் பதவிக் காலம் நீடிப்பு

கொழும்பு, ஜூன் 30

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்கவின் பதவிக்காலம் 6 ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால்வீரசிங்கவின்பதவிக்காலத்தை நீடிக்க வேண்டுமென்று 15

பிராந்திய கடவுச்சீட்டு அலுவலகங்களில்

## திங்கள் தொடக்கம் ஒருநாள் சேவை!

கொழும்பு, ஜூன் 30

குடிவரவு - குடியகல்வுத் திணைக்களத்தின் வவுனியா, மாத்தறை மற்றும் கண்டி பிராந்திய அலுவலகங்களில் ஒரு நாள் சேவை எதிர்வரும் திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு நாளில் கடவுச் சீட்டு வழங்கும் 15

## கிடைக்கும் எரிபொருளை பகிர்ந்தளிக்கவே முயற்சி

யாழ். மாவட்ட அதிகாரிகள் தெரிவிப்பு
ஐ.ஓ.சி. நிரப்பு நிலையத்தில் மக்கள் கொதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ்ப்பாணத்திலுள்ள ஐ.ஓ.சி. நிறுவனத்தின் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் கிடைக்கும் சந்தர்ப்பத்தில்அத்தியாவசியசேவையினருக்கும், 15

வெலிகந்தை - கந்தகாடு

## மறுவாழ்வு நிலையத்தில் வெடித்தது கலவரம்!

ஒருவர் உயிரிழப்பு!
500 பேர் வரையில் தப்பியோட்டம்
232 பேர் மீண்டும் உள்ளே

கொழும்பு, ஜூன் 30

பொலநறுவை, வெலிகந்தை - கந்தகாடு மறுவாழ்வு நிலையத்தில் இரு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மறுவாழ்வு நிலையத்தில் இருந்த 500 பேர் தப்பியோடியுள்ள நிலையில், நேற்று மாலை வரையில் 232 பேர் பாதுகாப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கந்தகாடு மறுவாழ்வு நிலையத்தில் போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் தடுத்து வைக்கப்பட்டு, 12

பெற்றோல் தருவதாகக் கூறி

## எம்மை ஏமாற்றிவிட்டார் ஆளுநர்: விரைவில் பணிப்புறக்கணிப்பு!

வ.பி.போ.ச. பருத்தித்துறைசாலை ஊழியர்கள் கொந்தளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 30

வடக்கு ஆளுநரும், மாவட்டச் செயலரும் எமக்கு உறுதியளித்தபடி பெற்றோலை இன்னும் வழங்கவில்லை. போக்குவரத்துச் சேவை 15

## பெற்றோல் கிடைக்காததால் டீசலைத் தடுக்கின்றனர்!

பருத்தித்துறை தனியார் பஸ் சங்கம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 30

பருத்தித்துறை வ.பி.போ.ச. தொழிற்சங்கத்தினர் தங்களுக்குப் பெற்றோல் கிடைக்கவில்லை என்பதற்காக எமக்குக் கிடைக்கவேண்டிய டீசலைத் தடுக்கின்றனர்.

இந்த நிலைமை தொடர்ந்தால் எமது சேவைகளை நடத்த முடியாதுபோகும் என்று யாழ். மாவட்டக் கூட்டிணைக்கப்பட்ட பஸ் கம்பனிகளின் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12 வருடங்களின் பின் விடுதலையான கைதிக்கு 55 இலட்சம் ரூபா இழப்பீடு

**யாழ்ப்பாணம், ஜூன் 30**

**12 வருடங்களின் பின்னர் நிரபராதியென விடுதலையான கைதிக்கு இழப்பீடு வழங்கக் கோரி அரசுக்கு எதிராக சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசாவால் மனித உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்யப்பட்டமையை அடுத்து குறித்த நபருக்கு சுமார் 55 லட்சத்து 23ஆயிரம் ரூபா இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.**

பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்ட கைதிக்கு இழப்பீடு வழங்கப்பட்ட முதல் வழக்கு இது வாகும்.

கொழும்பு-08 பொரளை பொலிஸ் நிலையத்துக்குப் பின்புறமாக இரகசியமாக இயக்கப்பட்ட புலனாய்வுப் பிரிவில் புலனாய்வு அதிகாரியாகச் சேவையாற்றி வந்த துய்யலாகே தர்மதாச 2007 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி பயங்கரவாதத் தடைப் பிரிவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட அரசபுலனாய்வுத்துறை அதிகாரியை பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் தடுத்துவைத்து விசாரணை நடத்திய பின்னர், சட்டமா அதிபரினால் துய்யலாகே தர்மதாசவுக்கு எதிராக 23 கிராம் வெடிமருந்து, 35 துப்பாக்கி ரவைகள் மற்றும் 8 சயனைட் வில்லைகளை தனி உடமையில் வைத்திருந்தமை மற்றும் பாதுகாப்பு இரகசியங்களை புலிகளின் உளவுத்துறைக்கு வழங்கியமையென மூன்று குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன.

12 வருடங்களாக நடைபெற்ற விசாரணைகளின் பின்னர் எதிராளி தர்மதாச சார்பாக முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி கே. வி. தவராசாவினது வாதங்களை செவிமடுத்த மேல் நீதிமன்ற நீதிபதி பிரதீப் ஹெட்டியாராச்சி தனது தீர்ப்பில் எதிராளி தரப்பு வாதத்தை கவனத்தில் கொண்டு எதிராளி மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுக்களை அரசதரப்பு நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் நிரூபிக்க தவறியுள்ளமையால் எதிராளியான முன்னாள் புலனாய்வுத்துறை அதிகாரியை 2019 ஆம் ஆண்டு விடுதலைசெய்தார்.

2019 ஆம் ஆண்டு விடுதலை செய்யப்பட்ட தர்மதாச சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா பொலிஸ் மா அதிபர், களனி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரொஷான்டயஸ், சிறைச்சாலைப் பொறுப்பதிகாரி, சிறைச்சாலை அத்தியட்சகர், சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மற்றும் சட்ட மா அதிபர் ஆகியோரை பிரதிவாதிகளாகப் பெயர் குறிப்பிட்டு அரசமைப்பின் 17 மற்றும் 126 ஆம் உறுப்புரைகளுக்கு அமைய வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அந்த மனுவில் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது சிறுநீரக பிரச்சினையால் பாதிக்கப்பட்டிருந்த தர்மதாஸ சிறுநீரகக் கோளாறால் அவஸ்தைப்பட்டுள்ளார். ஆனால் அதனைச் சிறை அதிகாரிகள் ஒரு பொருட்டாகவே எடுக்கவில்லை. சிகிச்சை அளிக்காமல் கைதியை நோயில் துடிக்க விடுவது கூட கோரமான சித்திரவதைதான். விளக்கமறியலில் இருந்த போது தர்மதாஸ அடிக்கடி சுகவீனம் அடைந்துள்ளார். அத்துடன் ஒரு நிரபராதியான நேர்மையான பொலிஸ் உத்தியோகத்தரை 12 வருடங்கள் சிறை வைத்திருந்து அவரின் எதிர்காலத்தையே இருளாக மாற்றிவிட்டது அரசாங்கம். தர்மதாஸ குற்றமற்றவர் என்று விடுவிக்கப்பட்டபோதும் அவரை மீளவும் பொலிஸ் பதவியில் அமர்த்தவோ இழப்பீடு வழங்கவோ எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. அவர் சிறையில் இருந்தபோது மாமியாரின் ஓய்வூதியப் பணமே தர்மதாஸவின் பிள்ளைகளுக்கும், மனைவிக்கும் வாழ்க்கையை கொண்டு செல்ல உதவியது. தர்மதாஸ விடுவிக்கப்பட்ட பின்னரும் கூட பொலிஸ் வேலை மீளக் கிடைக்காமையால் தொடர்ந்தும் அவரது குடும்பம் மாமியாரின் ஓய்வூதியப் பணத்தையே தங்கள் வாழ்வாதாரமாக நம்பியிருக்க வேண்டிய அவலம் தொடர்கின்றது என மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

தர்மதாஸ 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் உயிரிழந்ததை அடுத்து தர்மதாஸவின் மனைவியான சந்தியா தமயந்தி மனுதாரராக பெயரிடப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட மனு உயர் நீதிமன்றில் விசாரணைக்குத் திகதி குறிப்பிடப்பட்டிருக்கையில் இம்மாதம் 24 ஆம் திகதியிடப்பட்டு தர்மதாஸவின் மனைவிக்கு சுமார் 55 லட்சத்து 23 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை அரச தரப்பால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம)

# சுத்திகரிப்பு நிலையத்தை விற்பதற்கு விடமாட்டோம்

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 30**



நாட்டில் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ள வேளையில், அந்த நெருக்கடியை பொருட்டாக வைத்து, நாட்டின் பெறுமதியான வளங்களில் ஒன்றான எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை, வெளிநாடுகளுக்கு விற்பனை செய்ய ராஜபக்ச குடும்பத்தினர் தலைமையிலான முயற்சிகளுக்கு இடமளிக்க மாட்டோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமானது முழுமையான செயற்பாட்டின் ஊடாக 100 வீதமான மண்ணெண்ணெய் தேவையையும், சுமார் 50 வீதம் விமானங்களுக்கான எரிபொருள் தேவையையும், 100 வீதம் நெக்டா தேவையையும், 30 வீதம் டீசல், 14 வீதம் பெட்ரோல், 8 வீதம் எரிவாயு தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடிய பெறுமதி மிக்க வளமாகும். நாட்டிலுள்ள தூரநோக்கற்ற, வினைத்திறனற்ற அரச நிர்வாகத்தால் நாட்டில் ஏற்பட்டுள்ள சீர்குலைவின் காரணமாக இந்த தேசிய வளத்தை திருட்டுத்தனமாக ஏலம் விடுவதற்கு முயற்சிக்கப்படுகின்றது. அரசுக்குச் சொந்தமான மதிப்புமிக்க நிறுவனங்களை ஏலம் போட முயற்சி நடந்தால்,அதற்கெதிராக கட்சி பேதங்கள் இன்றி ஒரே நிலைப்பாட்டின் கீழ் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் - என்றார். (ம)

## கறுப்புச் சந்தையில் எரிபொருள்

# 75,000 லீ. மீட்பு 768 பேர் கைது!

## பொலிஸாரால் அதிரடி சுற்றிவளைப்பு

எரிபொருளை மறைத்து கறுப்புச் சந்தையில் அதிக விலைக்கு விற்பனை செய்வோரிடம் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் இதுவரை 75 ஆயிரத்துக்கும் அதிக லீற்றர் எரிபொருள் கைப்பற்றப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

எரிபொருளை ஒவ்வோர் எரிபொருள் நிலையங்களிலும் அதிகளவில் கொள்வனவு செய்து கறுப்புச் சந்தையில் விற்பனை செய்யும் மாபியாக்கள் நாட்டில் உருவாகியுள்ளன என அதிகளவில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன.

இந்த நிலையில் நாடளாவிய ரீதியில் பொலிஸார் மேற்கொண்ட அதிரடி சுற்றிவளைப்பில் இதுவரை 23 ஆயிரத்து 728 லீற்றர் பெற்றோலும் 41 ஆயிரத்து 382 லீற்றர் டீசலும் 11 ஆயிரத்து 876 லீற்றர் மண்ணெண்ணெயும் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன் இந்தக் குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 768 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

# அலைபேசி திருடியவர் பொலிஸில் ஒப்படைப்பு

**யாழ்ப்பாணம், ஜூன் 30**

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நிறுத்திவைக்கப்பட்ட மோட்டார் சைக்கிளின் 'டிக்கி'யை உடைத்து தொலைபேசி திருடியவரை பொதுமக்கள் மடக்கிப் பிடித்து வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச்சம்பவம் தொல்புரம் வழக்கம்பரை அம்மன் ஆலயத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

வவுனியா, நெளுக்குளம் பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞரையே பொதுமக்கள் மடக்கிப் பிடித்து பொலிஸில் ஒப்படைத்துள்ளனர்.

அப்பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர் தனது தாயுடன் ஆலயத்தின் வெளியே மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு ஆலயத்துக்குள் சென்று வழிபட்டுவிட்டு திரும்பிவந்து பார்த்தபோது மோட்டார் சைக்கிளின் 'டிக்கி' உடைக்கப்பட்டு அதிலிருந்த தொலைபேசி திருடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து அங்கிருந்த மக்கள் சந்தேகத்துக்கிடமாக நடமாடிய இளைஞரொருவரை மடக்கிப்பிடித்து சோதனை நடத்தியபோது அவரிடமிருந்து இரு கைபேசிகளை கைப்பற்றினர். இது தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சந்தேகநபரை கைது செய்தனர். (ச-125)



# பஸ் இல்லாததால் கடமை நேரத்துக்கு பாடசாலைக்குச் செல்ல முடியவில்லை

## ஆசிரியர்கள் கவலை

**கிளிநொச்சி, ஜூன் 30**

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பஸ்கள் சேவையில் ஈடுபடாததால் கடமை நேரத்துக்கு தாம் பாடசாலைகளுக்குச் செல்ல முடியவில்லை என்று ஆசிரியர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து வந்து கிளிநொச்சி கிராம பாடசாலைகளுக்கு செல்லும் ஆசிரியர்கள் நீண்ட நேரம் வீதியில் காத்திருந்தனர். இலங்கைப் போக்குவரத்துச்சபையின் கிளிநொச்சி சாலையினர் தங்கள் பணியாளர்களுக்கு எரிபொருள் கோரி பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இதே வேளை தனியார் பஸ்கள் போதிய எரிபொருள் இன்றி தங்களது சேவையை மட்டுப்படுத்தியுள்ளனர். இதனால் தாம் உரிய நேரத்துக்கு பாடசாலைகளுக்கு கடமைக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பாடசாலைகளில் வரவை உறுதிப்படுத்துவதற்கு கைவிரல் அடையாள இயந்திரம் இருப்பதால், ஆசிரியர்கள் தாமதமாகி செல்கின்ற போது சில வேளைகளில் அரைநாள் கடமையாக பதிவேற்றப்படுகின்றன. அத்துடன் மாணவர்கள் முதல் பாடவேளையை வெறுமையாகக் கழிக்கின்றனர். இவ்வாறான எமது நிலைமைகளைக் கருத்திற்கொண்டு இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தவேண்டும் என்று ஆசிரியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-14.214)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடிக்கையாளரின் நலன்கருதி வீட்டிலிருந்தே விளம்பரங்களை உதயனுக்கு அனுப்பும் வசதி!

எரிபொருள் நெருக்கடியால் உங்கள் அபிமான உதயன் பணிமனைக்கு வந்து விளம்பரங்களை கையளிக்க முடியாதுள்ள நடைமுறைச்சிக்கலைத் தீர்க்கும் வகையில்,

இனிமேல் நீங்கள் இருக்குமிடத்தில் இருந்தபடியே உதயனுக்கு விளம்பரங்களை மின்னஞ்சல்/ வட்ஸப்/ வைபர் போன்றவற்றின் ஊடாக அனுப்பி வைக்க

வைபர், வட்ஸப் ஊடாக விளம்பரங்களைச் செம்மை பார்க்கும் வசதியும் வழங்கப்படும்.

விளம்பரக் கட்டணத்தை , வங்கிகளில் நேரடியாகவோ அல்லது ஒன்லைன் மூலமோ வைப்பிட்ட உறுதிச்சீட்டையின் புகைப்படத்தை அனுப்பிவைப்பதனூடாக விளம்பரம் பிரசுரமாவதை உறுதி செய்யலாம்.

விளம்பரங்களை அனுப்பவேண்டிய வட்ஸப்/வைபர் இலக்கம்

077 120 9996

மின்னஞ்சல்: advt@uthayan.com

## ஊவா பல்கலை கல்வி நடவடிக்கை இடைநிறுத்தம்

நாட்டின் தற்போதைய நெருக்கடியால் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகளை தற்காலிகமாக இடைநிறுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர தெரிவித்துள்ளார்.

அதன்படி இன்று முதல் (நேற்று) மறு அறிவித்தல் வரை கல்வி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்படுகின்றன எனவும் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார, எரிபொருள் நெருக்கடியால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். (ச-இ)

### இலங்கை மனித உரிமைகள் மீறல்கள்

# ‘வீட்டோ’ பாவிக்கப்பட்டால் பொறுப்புக்கூறலில் பாதிப்பு

### பிரிட்டன் அமைச்சர் தெரிவிப்பு



**கொழும்பு, ஜூன் 30**


**ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் இலங்கை தொடர்பாக முன்வைக்கப்படும் தீர்மானத்துக்கு எதிராக ‘வீட்டோ’ அதிகாரம் பாவிக்கப்பட்டால் அது பொறுப்புக்கூறல் நடவடிக்கைகளைப் பாதிக்கும் என்று பிரிட்டன் அமைச்சர் விக்கிபோர்ட் தெரிவித்தார்.**

தொழில்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்டீபன் மோர்கன் நாடாளுமன்றத்தில், ‘இலங்கையில் தமிழ் சமூகத்துக்கு எதிரான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களை சர்வதேச நீதிமன்றத்தின் முன்னால் நிறுத்துவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?' என கேள்வி எழுப்பினார். இதற்குப் பதில் வழங்குகையிலேயே பிரிட்டன் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சர்வதேச நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்தும் நடவடிக்கைகளுக்குப் பாதுகாப்பு சபை ஆதரவளிக்காவிட்டால் அல்லது வீட்டோ செய்தால் அதன் காரணமாக பொறுப்புக்கூறச்செய்யும் நடவடிக்கைகள் பாதிக்கப்படலாம் என விக்கிபோர்ட் மேலும் தெரிவித்தார். (ம)

### சீனா நன்கொடை

# 10,000 மெற்றிக் தொன் அரிசி கையளிப்பு



கொழும்பு, ஜூன் 30

சீன மக்களின் நன்கொடையாக 10 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசியின் முதலாவது தொகுதி நேற்றுமுன்தினம் சிறிலங்கா அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டது.

44 கொள்கலன்களில் கொண்டுவரப்பட்ட இந்த முதற்கட்ட அரிசித் தொகையை சீனத் தூதரகப் பிரதிநிதிகள் பதில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவிடம் கையளித்தனர்.

சீன மக்களின் பங்களிப்பில் எதிர்வரும் 6 மாதங்களுக்கு இலங்கை மாணவர்களின் உணவுத் திட்டத்துக்கு பகிர்ந்தளிக்க இந்த நன்கொடை வழங்கப்படுகின்றது என சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது. (ச-இ)

## மருந்துப்பொருளை வழங்கியது மலேசியா

கொழும்பு, ஜூன் 30

மலேசியாவிலுள்ள மத அமைப்புக்களால் இலங்கைக்கு அவசர மருந்து மற்றும் மருத்துவ பொருள்கள் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன.

54 ஆயிரத்து 46 அமெரிக்க டொலர் பெறுமதியான மருந்துப் பொருள்கள் மலேசியா, கோலாலம்பூரிலிருந்து கொழும்புக்கு ஸ்ரீலங்கா எயார் லைன்ஸ் மூலம் கொண்டு வரப்பட்டு மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவரிடம் கடந்த 20 ஆம் திகதி கையளிக்கப்பட்டன. (ச-இ)




பல எலி சேர்ந்தால் புத்தெடுக்க முடியாது கண்டியளோ. ஏனெண்டால் ஒவ்வொண்டும் ஒவ்வொரு பக்கமா, தங்கட பாட்டில முடிவெடுத்தால் எல்லாம் குழம்பத்தானே செய்யும். அதை மாதிரித்தான் இப்ப பெற்றோல் குடுக்கிறதிலையும் கனக்க குழப்பங்கள். எல்லாத்துக்கும் காரணம், கனபேர் முடிவெடுக்கிறதுதான். எல்லாரும் சேர்ந்து கதைச்சு ஒரு முடிவை எடுத்தால், ஒரு குழப்பமுமில்லாமல் சனத்துக்கு பெற்றோலைக் குடுக்க முடியும். ஆனால் ஆளாளுக்கு தங்கட அதிகாரத்தைக் காட்ட நினைச்சு, ஒவ்வொரு விதமா முடிவெடுக்கிறதால், குழப்பம் இன்னும் கூடிக்கொண்டே போகுது.

ஐ.ஓ.சி. க்குச் சொந்தமான செற்றுகளில எல்லாருக்கும் பெற்றோல் குடுபடும் எண்டு அறிவிச்சவை. ஆனால் அங்க சனம் போனால், அங்கையும் அத்தியாவசியப் பணியாளருக்குத்தான் அடிக்கச் சொல்லி கச்சேரி ஓர்டர் போட்டிருக்காம். யாழ்ப்பாணத்தில உள்ள எல்லா ஐ.ஓ.சி. செற்றுகளிலையும் இதுதான் கதை. 'எல்லா செற்றிலையும் அத்தியாவசியப் பணியாளருக்கு மட்டும்தான் பெற்றோல் அடிப்பினம் எண்டால், நாங்கள் அவசர தேவைக்கு எந்த செற்றில போய் பெற்றோல் அடிக்கிறது? நாங்கள் மட்டுமென்ன அநாவசிய தேவைக்கோ பெற்றோல் அடிக்கப் போறம்?' எண்டு சனம் கேக்குது.

யாழ்ப்பாணத்தில அத்தியாவசிய சேவைக்கு மட்டும்தான் பெற்றோல் அடிப்பம் எண்டு மாவாட்டிற செயலர் வலுஎழுப்பமா அறிக்கை விட்டவர். அதுக்கெண்டு ரண்டு பெற்றோல் செற்றும் அறிவிச்சவை. ஆனால் அங்க இதுவரைக்கும் பெற்றோல் வரேலை. ஆனால் காங்கேசந்துறையில உள்ள பெற்றோல் குதத்தில இன்னும் ஒரு லட்சம் லீற்றர் பெற்றோலும், ஒரு லட்சம் லீற்றர் டீசலும் கிடக்குது. அந்தப் பெற்றோலை கிழமைக்கு இத்தினை லீற்றர் எண்ட அடிப்படையில கொண்டந்து குடுக்கிறதுக்கு ஒரு நடவடிக்கையும் எடுக்கேலையாம். இப்பிடி ஆனையும் எழுப்பி, முயலையும் எழுப்பிற வேலையை விட்டிட்டு, காங்கேசனில இருக்கிற பெற்றோலை அத்தியாவசிய தேவைக்கெண்டு ஒதுக்கின செற்றுகளுக்கு கிரமமா அனுப்பி வைச்சு, அங்க அத்தியாவசியப் பணியாளருக்கு ஒழுங்காக் குடுத்தால், ஐ.ஓ.சி. செற்றுகளில பொதுசனம் தங்கட அவசரத்தேவைக்கு பெற்றோல் அடிக்க முடியுமெல்லோ? குழப்பிற மாதிரி மாவாட்டிறதை விட்டுட்டு, உரிய அதிகாரிமார் கொஞ்சம் யதார்த்தமா யோசிச்சா வழி கிடைக்கும்.




- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எரிபொருள் இல்லை; மின்உற்பத்தி வீழ்ச்சி

# எதிர்வரும் நாள்களில் 10-15 மணிநேர மின்தடை



## மின்பொறியியலாளர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 30

**நாட்டில் எதிர்வரும் நாள்களில் 10 முதல் 15 மணிநேரம் மின்வெட்டு நடைமுறையாகலாம் என மின் பொறியியலாளர் சங்கம் அறிவித்துள்ளது.**

இதுதொடர்பில் மின்பொறியியலாளர் சங்கத்தின் தலைவர் அனில் ரஞ்சித் தெரிவித்ததாவது:-

நாட்டில் தற்போது கடுமையான எரிபொருள் பற்றாக்குறையால் மின்சார உற்பத்தியில் நெருக்கடி நிலைமை உருவாகியுள்ளது.

நீர் மின் உற்பத்தி நிலையங்களில் உரிய முறையில் மின்சாரம் உற்பத்தி செய்யப்படாவிட்டால் எதிர்வரும் நாள்களில் 10 முதல் 15 மணிநேரம் மின் வெட்டை நடைமுறைப்படுத்த நேரிடலாம்.

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் ஒரு பகுதி திருத்தப் பணிகளுக்காக மூடப்பட்டுள்ளது.

இதனால் 270 மெகாவோட் மின்சார உற்பத்தி தடைப்பட்டுள்ளது.

உரிய முகாமைத்துவமின்றி நீர் மின்உற்பத்தி செய்தால் நீர்மட்டம் குறைந்து தற்போது உற்பத்தி செய்யப்படும் அளவில் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியாமல் போகலாம்.

ஆகவே அனைத்துத் தரப்பினரும் இணைந்து பேச்சு நடத்தப்படாவிட்டால் பெரும் சிக்கல்களை மக்கள் எதிர்கொள்ள நேரிடும் - என்றார். (ச-இ)

### எரிபொருள் தட்டுப்பாட்டால்

# யாழ்.பல்கலை சுகாதார சேவை பிற்பகல் ஒரு மணியுடன் நிறைவு

யாழ்ப்பாணம், ஜூன் 30

எரிபொருள் தட்டுப்பாட்டால் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பிரதான வளாகத்தில் அமைந்துள்ள சுகாதார மத்திய நிலையத்தின் அனைத்து சேவைகளும் பிற்பகல் ஒரு மணியுடன் நிறுத்தப்படுவதாக சுகாதார மத்திய நிலையம் நேற்றுமுன்தினம் அறிவித்துள்ளது.

இதனால் பல்கலை மாணவர்களிடையே சுகவீனங்கள் மற்றும் திடீர்க் காயங்கள் ஏற்படுகின்ற பொழுது யாழ்.போதனா மருத்துவமனைக்குச் செல்வதற்கு போக்குவரத்து வசதிகள் இல்லாமையால் அருகில் இருக்கும் தனியார் மருத்துவமனைகளுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தில் மாணவர் ஒருவர் நேற்றுமுன்தினம் காயத்துக்குள்ளாகியுள்ளார்.

அந்த மாணவர் யாழ்.போதனா மருத்துவமனைக்குச் செல்வதற்கு போக்குவரத்து வசதிகள் இல்லாமையால் அருகில் இருந்த தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளார்.

எனவே மாணவர்களின் தற்கால நிலையைக் கருத்திற்கொண்டு சுகாதாார சேவையை வழங்க வேண்டும் என பல்கலைக்கழக மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஓ-14-125)

# சவப்பெட்டிக்குள் நாடு அடக்கம்தான் மிச்சம்!

## வினோ எம்.பி. தெரிவிப்பு

வவுனியா, ஜூன் 30

இந்தநாடு அதன் ஆட்சியாளர்களாலும், தலைவர்களாலும் சவப்பெட்டிக்குள்ளே வைத்து அடைக்கப்பட்டுள்ளது. அல்லது அடக்கம் செய்யும் நிலைக்கு வந்துள்ளது. சவப்பெட்டிக்குள்ளே இருக்கும் இலங்கை என்ற நாட்டுக்கு ஆணி அடித்து அடக்கம் செய்வதே இறுதிவேலையாக உள்ளது - என்று நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமை தொடர்பில் வ்வுனியாவில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அத்தியாவசியத் தேவைக்கு மாத்திரம் எரிபொருளை வழங்குவதாக தீர்மானிக்கப்பட்டமை ஏற்றுக்கொள்ள முடியாத செயல். ஏனெனில் அத்தியாவசியத்தேவை என்பது இன்றைய சூழலில் ஒவ்வொரு மனிதருக்கும், நபருக்கும் உரியதாக மாறிவிட்டது.

எனவே எரிபொருளானது தேவை ஏற்படுகின்ற அனைவருக்கும் நிச்சயமாக வழங்கப்படவேண்டும்.

சர்வதேச உதவிகளோ அல்லது புதிய அரசாங்கத்தின் மூலமோ இந்த நாட்டின் அழிவைத் தடுக்க முடியாது.

அதற்கு பிரதான காரணம் இந்த நாட்டின் ஜனாதிபதியும் பிரதமரும். ஒட்டுமொத்தமாக இந்த நாடு அழிந்துபோவதை யாராலும் தடுக்க முடியாத ஒரு நிலமை ஏற்பட்டுள்ளது. தமிழர்களை கடவுள்தான் காப்பாற்றவேண்டும் என்று தந்தை செல்வா கூறினார். ஆனால் இந்த நாட்டை கடவுளாலும் காப்பாற்ற முடியாத நிலை இன்று ஏற்பட்டுள்ளது. வரிசைகளின் எண்ணிக்கையோ அதிகரித்துச் செல்கின்றது. ஜனாதிபதிக்கோ பிரதமருக்கோ அதுபற்றித் தெரியாது.

இந்த வரிசைகளினால் பொதுமக்கள் படும் துன்ப, துயரங்கள் அவர்களுக்குத் தெரியாது. அவர்களும் இந்த வரிசைகளில் நின்றாலே மக்களின் துயரங்களை உணர்ந்து கொள்வார்கள் -என்றார். (ம-110)

# எரிபொருள் இன்றி ரஷ்யத் தம்பதி தவிப்பு

## எரிபொருள் வழங்கி உரிமையாளர் உதவி

கொழும்பு, ஜூன் 30

இலங்கைக்கு சுற்றுலாப் பயணம் மேற்கொண்டு அவசரமாக நாடு திரும்புவதற்கு எரிபொருள் இன்றித் தவித்த ரஷ்யத் தம்பதிக்கு எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளர் ஒருவர் பாதுகாப்பு இருப்பிலிருந்த எரிபொருளை வழங்கி உதவியுள்ளார்.

இந்தச் சம்பவம் கலேவெல, தலகிரியாகம பிரதேசத்தில் கடந்த 27ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

நாட்டில் உள்ள பல எரிபொருள் நிலையங்கள் எரிபொருளின்றி மூடப்பட்டுள்ளன.

இந்த நிலையில் இந்தத் தம்பதியர் அவசரமாக நாடு திரும்புவதற்கு விமான நிலையம் செல்வதற்கு எரிபொருளின்றி தவித்துள்ளனர்.

அங்குள்ள எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் ஒருவரிடம் எரிபொருள் தாருங்கள் என வேண்டியுள்ளனர்.

எனினும் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் தீர்ந்துவிட்ட நிலையில் எரிபொருள் பம்பிகளுக்கு சேதம் ஏற்படாதவாறு பாதுகாப்பு கையிருப்பிலிருந்த எரிபொருளை வழங்கி உரிமையாளர் அவர்களுக்கு உதவியுள்ளார்.

இதற்கு ரஷ்யத் தம்பதியர் நன்றி தெரிவித்ததுடன் இலங்கையின் எரிபொருள் நெருக்கடி அவல நிலை தொடர்பில் தமது தூதரகங்களுக்கு அறிவிப்போம் எனத் தெரிவித்து நெகிழ்ச்சியுடன் நாடு திரும்பினர். (ச-இ)

# இன்னலில் கைகொடுக்கும் அமெரிக்காவை மறவோம்

## ஜனாதிபதி தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 30

இலங்கையின் நெருக்கடியான நேரத்தில் கைகொடுப்பதற்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அரசாங்கத்துக்கு நாம் நன்றியுள்ளவர்களாக இருப்போம் என ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார். அவர் தனது ருவிற்றர் பதிவில் இதனைத் தெரிவித்துள்ளார்,

அதில் உள்ளதாவது:-

இலங்கையிலுள்ள சிறார்கள் மற்றும் கர்ப்பிணிகளின் உணவுப் பாதுகாப்புக்காக அமெரிக்கா 20 மில்லியன் டொலரை வழங்கவுள்ளது.

ஜி-7 உச்சி மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது 8 லட்சத்துக்கும் அதிகமான சிறுவர்கள் மற்றும் 27 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் தாய்மார்கள் நன்மையடையவுள்ளனர்.

தற்போதைய நெருக்கடியான நேரத்தில் கைகொடுக்கும் அமெரிக்காவுக்கு நாம் கடமைப்பட்டுள்ளோம் -என்றுள்ளது. (ச-இ)

### எரிபொருள் பிரச்சினை

# மதுவரித் திணைக்களத்துக்கு தினசரி 10-15 கோடி இழப்பு

கொழும்பு, ஜூன் 30

நாட்டின் எரிபொருள் நெருக்கடியால் மதுவரித் திணைக்களம் நாளாந்தம் 10 முதல் 15 கோடி ரூபா வருமான இழப்பை சந்திக்கின்றது என திணைக்கள ஆணையாளர் நாயகம் எம்.ஜே.குணசிறி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பணியாளர்களின் போக்குவரத்து நெருக்கடி, விலை அதிகரிப்பு, மின்சாரத் தடை, நுகர்வு குறைவடைதல் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளே இதற்குக் காரணம்.

இதனால் நாளாந்தம் 10 முதல் 15 கோடி ரூபா வரை வருமான இழப்பு மதுவரித் திணைக்களத்துக்கு ஏற்படுகின்றது. இதேவேளை சுங்கத் திணைக்களம், வருமான வரித் திணைக்களம் என்பனவற்றுக்கு அடுத்தபடியாக சிறிலங்கா அரசுக்கு கூடுதல் வருமானம் கொண்டு வரும் நிறுவனமாக மதுவரித் திணைக்களம் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் சுற்றுலாத்துறையை விரிவாக்க புதிய திட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 30

வடக்கு மாகாணத்தின் சுற்றுலா அபிவிருத்தியானது எதிர்வரும் காலத்தில் பல்வேறு துறைகளினூடாக மேம்படுத்தப்படும் என வடமாகாண சுற்றுலா பணியகத்தின் பணிப்பாளர் சுனில் திசாநாயக்க தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் பிரதான கேட்போர் கூடத்தில் கடந்த திங்கட்கிழமை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடமாகாணத்தின் சுற்றுலா விருத்தியானது தற்பொழுது போக்குவரத்துக் கட்டமைப்புக்களூடாக விருத்தியடைய இருக்கின்றது. தற்சமயம் வடமாகாண ஆளுநரின் முயற்சியின் ஊடாக வடக்குக்கு இரண்டாவது கடுகதி புகையிரதம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. இது ஒரு முன்னேற்ற மான விடயமாகும். வார இறுதிநாள்களில் அதிகளவான சுற்றுலா பயணிகளை சொகுசானமுறையில்வடக்குக்குஅழைத்து வருவதற்கு கடுகதி புகையிரதம் பெரும் பங்கு வகிக்கின்றது.

மேலும் பலாலி விமான நிலையத்தின் ஊடாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை வடமாகாணத்துக்கு உள்ளீப்பதற்கான செயற்றிட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக இரத்மலானை விமான நிலையத் தின் ஊடாகவும் கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாகவும் உள்நாட்டுப் பயணிகளை பலாலி விமான நிலையத்தை அடைவதற்கான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட உள்ளன.



மேலும் தூத்துக்குடிமுதல் காங்கேசன்துறை வரையான சரக்கு கப்பல் பயணம் மற்றும் பாண்டிச்சேரி முதல் காங்கேசன்துறை வரையான பயணிகள் கப்பல் சேவைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன. அத்துடன் இவற்றை மையப்படுத்தி தீர்வையற்ற கடைகளும் திறக்கப்படவுள்ளன.

வடமாகாண சுற்றுலாப் பணியகத்தால் மன்னாரில் 300 ஏக்கர் நிலப் பரப்பும், நெடுந்தீவில் 70 ஏக்கர் நிலப்பரப்பும் தெரிவுசெய்யப்பட்டுள் ளன. குறித்த நிலப்பரப் பில் வீதிய பவிருத்தி, மின்சாரம், தொலைத் தொடர்பு வசதிகளை ஏற்படுத்தி சுற்றுலாசார் முதலீட்டா ளர்களுக்கு குத்தகைக்கு விடப்படவுள்ளது. வடமாகாண சுற்றுலா வலைத்தளம் ஒன்றும் சுற்றுலா பயணிகளை தன்னியக்கமான முறையில் வழிகாட்டுவதற்கு உருவாக்கப்படவுள்ளது - என்றார். (ம-125)





## தே.எண்ணெய் உற்பத்திக்காக ஜப்பானால் நவீன இயந்திரங்கள்

முல்லைத்தீவு, ஜூன் 30

விசுவமடுக்குளம் பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் இயங்கிவரும் தேங்காய் எண்ணெய் உற்பத்திக்காக ஜப்பானின் 2 மில்லியன் ரூபா நிதியில் நவீன இயந்திரங்கள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.

இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் மிசுகோஷி ஹிடேகி, முல்லைத்தீவு விசுவமடுக்குளம் பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்துக்கு நேற்றுமுன்தினம் பயணம் மேற்கொண்டார்.

அதன்போதே ஜப்பானிய உதவியில் இயங்கிவரும் தேங்காய் எண்ணெய் உற்பத்திச் செயற்பாடுகளைப் பார்வையிட்டு இயந்திரங்களை வழங்கினார்.

அத்துடன் தேங்காய் எண்ணெய் உற்பத்திக் கட்டடத்துக்கான நினைவுக்கல்லையும் திரைநீக்கம் செய்தார்.

நிகழ்வில் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.கேரத், பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தலைவர், பணியாளர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (ஓ-14.19)

## மடு பெருவிழாவுக்கு வருவோர் நகை அணிவதைத் தவிர்க்கவும்

மடுத் திருத்தல பெருவிழாவுக்கு வருவோர் நகைகள் அணிவதைத் தவிர்க்குமாறு பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாளைமறுதினம் சனிக்கிழமை மடுத் திருத்தலத்தின் பெருவிழா நடைபெறவுள்ளதை முன்னிட்டு பொலிஸார் இவ்வாறு தெரிவித்தனர்.

தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக, பெருவிழாவில் களவுகள் இடம்பெறுவதற்கு அதிக வாய்ப்புக்கள் உள் ளன. ஆகையால் மடுப் பெருவிழாவுக்கு வருகைதரும் பக்தர்கள் நகைகள் அணிவதைத்தவிர்த்துக் கொள்ளவேண்டும். அத்துடன் விலை உயர்ந்த பொருள்களை தங்களுடன் எடுத்து வருவதையும் தவிர்த்துக் கொள்ளுமாறு பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஓ-14.60)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சைவப்பெருவள்ளல் சேர்.பொன். இராமநாதனால் உருவாக்கப்பட்ட ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் ஜூலை மாதம் 6 ஆம் திகதி புதன்கிழமை காலை 6 மணி முதல் 7 மணி வரை இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு கிரியாரம்பம் நாளை வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணிக்கும் எண்ணெய்க்காப்பு எதிர்வரும் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 4 மணி வரையும் இடம்பெறும் என்று யாழ்.பல்கலைக்கழக ஆலய திருப்பணிச்சபையினர் அறிவித்துள்ளனர். (ஓ-14)

# வசிப்பிடத்துக்கு அருகிலுள்ள பாடசாலைகளில் ஆசிரிய மாணவர்களை இணையுங்கள்

## இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 30

தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்களை அவர்களது நிரந்தர வசிப்பிடங்களுக்கு அருகிலுள்ள பாடசாலைகளுக்கு இணைக்குமாறு இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம், கல்வி அமைச்சுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

பொருளாதார நெருக்கடியில் தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினை தொடர்பாக இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம், கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் மூன்றாம் ஆண்டு ஆசிரிய மாணவர்கள் சுமார் 8 ஆயிரம் பேர் பயிற்சிக்காக பாடசாலைகளுக்கு இணைப்புச் செய்யப்பட்டிருக்கின்றனர்.

நாட்டில் தற்போது நிலவும் கடுமையான பொருளாதார நெருக்கடியில் வாழ்க்கைச் செலவு நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்ற நிலையில் பயிற்சிக்காக பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள்ள ஆசிரிய மாணவர்கள் தமக்குரிய பாடசாலைகளுக்குச் செல்லும்போது தங்குமிடத்துக்கு அதிக கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது. அவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவாக ரூபா 5 ஆயிரம் மட்டுமே வழங்கப்படுகின்றது. தற்போதைய நெருக்கடியில் இது அவர்களின் பிரச்சினைகளுக்குப் போதுமானது அல்ல.

எனவே இவ்வாறான பிரச்சினைகளைக் குறைப்பதற்கு, நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள 19 தேசியக் கல்வியியற் கல்லூரிகளில் கல்வி பயிலும் 8 ஆயிரம் ஆசிரியர் பயிலுநர்களை அவர்களது நிரந்தர வசிப்பிடங்களுக்கு அருகிலுள்ள பாடசாலைகளுக்கு இணைப்புச் செய்து அவர்களின் அனைத்து கற்பித்தலையும் ஒழுங்குபடுத்தப்பட்ட பகுதிகளும் கண்காணிக்கப்படவேண்டும்.

அவ்வாறு இணைக்கப்பட்டுள்ள மாணவர்களை மேற்பார்வை செய்வது தொடர்பான பிரச்சினை களுக்குத் தீர்வு காண்பதற்கும், வலய மற்றும் மாகாண வளவாளர்கள் கொண்ட ஒருங்கிணைந்த பொறிமுறையொன்று அமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தவேண்டும்.

இதுவரை இவர்களுக்கு வழங்கப்பட்ட 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு தற்போதைய பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்குப் போதுமானதாக இல்லை. இதனால் இவர்களுக்கான கொடுப்பனவை குறைந்தபட்சம் 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறான பிரச்சினை தொடர்பில் கவனம் செலுத்தி தீர்வினைப் பெற்றுத்தருவீர்கள் என நம்புகின்றோம் - என்றுள்ளது. (ஓ-14,159)

## கஞ்சாவுடன் இளைஞர் கைது

தெல்லிப்பழைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் நபரொருவர் கஞ்சாவை உடைமையில் வைத்திருப்பதாக தெல்லிப்பழைப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் விசேட சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 2 கிராம் 900 மில்லிகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்ட இளைஞர் வறுத்தலைவிளான் பகுதியைச் சேர்ந்த 25 வயதானவர் என்று தெரிவித்த பொலிஸார் இளைஞருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். (ஓ-14,125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகா சங்கத்தினரின் ஆலோசனை பெறாததால்தான் பின்னடைவாம்



**கொழும்பு, ஜூன் 30**

**அதிகாரிகள் மகா சங்கத்தினரின் ஆலோசனையைப் பெறாததன் காரணமாக இலங்கையின் பொருளாதாரம் சீர்குலைந்துள்ளது என்று அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரரான வரகாகொட ஞானரதன தேரர் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையின் மதகுருமார்கள் வழங்கிய ஆலோசனைகள் மற்றும் எச்சரிக்கைகளை அரச அதிகாரிகள் புரிந்து கொள்ளவில்லை. பொருளாதார முறைகேடுகள் மற்றும் மதத் தலைவர்கள் வழங்கும் அறிவுரைகளை மதியாமை காரணமாகவே பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து வருகின்றது - என்றார். (ம)

## வெளிநாட்டுப் பணிப்பெண்கள் குடும்பப் பின்னணி அவசியம்

### அமைச்சரவை முடிவை எதிர்க்கிறது சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை

பணிப்பெண்களாக வெளிநாடு செல்லும் பெண்களின் குடும்பப் பின்னணி தொடர்பிலான அறிக்கையின் அமைச்சரவை அனுமதிக்கு சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அதிகார சபையின் தலைவர் உதய குமார அமரசிங்க தெரிவித்ததாவது:-

பணிப்பெண்களாக வெளிநாடு செல்லும் பெண்களின் குடும்பப் பின்னணி அவசியமில்லை என அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இது தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையிடம் கருத்துப்பகிர்ப்பு எதுவுமின்றி இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த தீர்மானத்தின் காரணமாக சிறு குழந்தைகளுக்கு தாயின் அன்பும், அரவணைப்பும் உரிய காலப்பகுதியில் கிடைக்காமல் போகும் நிலை உருவாகும்.

பணிப்பெண்களாக வெளிநாடு செல்வோர் தமக்கு 2 முதல் 5 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் இல்லை என்பதை உறுதிப்படுத்திய குடும்பப் பின்னணி அறிக்கை கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும். அமைச்சரவை வழங்கிய அனுமதிக்கு நாம் எதிர்ப்புத் தெரிவிக்கின்றோம் - என்றார். (ச-இ)

## ரஷ்ய விமானத்துக்கு எதிரான வழக்கைத் தள்ளுபடி செய்க!


### மேல் நீதிமன்றத்தில் நகர்த்தல் பத்திரம்

கொழும்பு, ஜூன் 30

ரஷ்யாவின் ஏரோ ப்ளோட் விமானத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கை தள்ளுபடி செய்யுமாறு கோரிக்கை விடுத்து, விமான நிலைய சேவைகள் நிறுவனம், சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடாக கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றில் நகர்த்தல் பத்திரம் ஒன்றை தாக்கல் செய்துள்ளது.

ரஷ்ய ஏரோ ப்ளோட் விமானத்துக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவை, இடைநிறுத்தி கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்ற நீதிபதி ஹர்ஷ சேதுங்க, கடந்த 6ஆம் திகதி உத்தரவு பிறப்பித்திருந்தார். நீதிமன்றத்தை தவறாக வழிநடத்தி உண்மைகளை தவறாக சித்திரித்து இந்தத் தடை உத்தரவு பெறப்பட்டதாக சட்டமா அதிபர் உள்ளிட்ட தரப்பினரால் முன்வைக்கப்பட்ட தரவுகளை கவனத்தில் எடுத்ததன் பின்னரே மேற்குறிப்பிட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் குறித்த வழக்கை தள்ளுபடி செய்யுமாறு நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)



## காலி டெஸ்ட் — ஆட்டம் ஆரம்பிப்பதற்கு முன்பு ஆடுகள அறிக்கை கோரிக்கை!

### புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு

கொழும்பு, ஜூன் 30

இலங்கை - அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் சுற்றுலா வழிகாட்டி ஒருவர் மூலமாக காலி ஆடுகளத்தின் அறிக்கை கோரப்பட்டமை பரபரப்பாகியுள்ளது.

இது தொடர்பில் புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தில் எவர் ஈடுபட்டனர்? எவருடைய அழுத்தத்தின் காரணமாக குறித்த சுற்றுலா வழிகாட்டி குறித்த அறிக்கையைக் கோரினார்? அல்லது இது தற்செயலான நடவடிக்கையா? என்பன தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

டெஸ்ட் கிரிக்கெட்டைப் பொறுத்த வரையில், ஆட்டம் ஆரம்பிக்கும் அன்றைய நாள் நாணயச் சுழற்சிக்கு முன்னதாக அணித் தலைவர்கள் மாத்திரமே ஆடுகளத்தைப் பார்வையிடலாம். அவர்களைத் தவிர வேறு எவரும் ஆடுகளத்தை நெருக்கமாகப் பார்ப்பதோ அல்லது ஆடுகள அறிக்கையைக் கோருவதோ முடியாது. அவ்வாறு நடந்தால் அது பாரதூரமான குற்றமாகக் கருதப்படும். (ம)

## ஊடகவியலாளர் தரிந்துவுக்கு எதிராக சி.ஐ.டி. விசாரணை!

கொழும்பு, ஜூன் 30

ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதரவுக்கு எதிராக சி.ஐ.டி.யின் கணினிக் குற்ற விசாரணைப் பிரிவு, சுமார் 4 மணி நேரம் விசாரணைகளை நடத்தி வாக்குமூலம் பதிவு செய்துள்ளது.

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 6ஆம் திகதி விமானப்படை உளவுப் பிரிவு அளித்த முறைப்பாட்டுக்கு அமைய இந்த விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன. குறித்த ஊடகவியலாளர் நடத்தும் 'சட்டன' எனும் யூரியூப் அலைவரிசையில் பதிவேற்றப்பட்ட காணொலிகளின் தலைப்பும் அவற்றின் உள்ளடக்கமும் ஒன்றுடன் ஒன்று பொருத்தவில்லை எனக் கூறி இந்த விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன.

குறித்த ஊடகவியலாளர் விசாரிக்கப்பட்ட இடத்துக்கு முன்பாக ஊடகவியலாளர்களும், சமூக செயற்பாட்டாளர்களும் இணைந்து அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் ஒன்றையும் முன்னெடுத்தனர். கருத்துச் சுதந்திரத்தையும், ஊடக சுதந்திரத்தையும் உறுதி செய்யுமாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினார்கள். (ம)

## ஒருவேளையே உணவு இரு நாள்களே கல்வி

### ஆஸி. அணித்தலைவர் கம்மின்ஸ் இலங்கை தொடர்பில் வேதனை

இலங்கையில் பல மாணவர்கள் ஒரு நாளில் ஒரு தடவையே உணவு உட்கொள்கின்றனர்.

வாரத்தில் இரு நாள்களே பாடசாலைக்குச் செல்கின்றனர் என்று உருக்கமாகக் கருத்துத் தெரிவித்துள்ளார் அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் டெஸ்ட் ஆட்டங்களுக்கான தலைவர் பட் கம்மின்ஸ்.

இலங்கை - அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையில் நேற்று ஆரம்பித்த டெஸ்ட் ஆட்டத்துக்கு முன்பாக, இலங்கையின் பொருளாதார நிலை தொடர்பில் இந்தக் கருத்தை அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வருகைதந்து, இலங்கையை சாதாரணமாக அனுபவிக்கும் அதிர்ஷ்டசாலிகளாக இருக்கின்றோம்.

ஆனால், இங்குள்ள மக்களின் நிலைமை அவ்வாறில்லை. அவர்களின் துன்பங்களை நாம் உணர்கின்றோம்.

நான் சில இளம் கிரிக்கெட்டர்களுடன் பேசினேன். அவர்கள் ஒரு நாளில் ஒரு தடவைதான் உணவுண்கின்றனர். ஒரு வாரத்தில் இரண்டு நாள்கள்தான் பாடசாலைகளுக்குச் செல்கின்றனர். ஏனெனில் ஆசிரியர்கள் பாடசாலைக்கு வருவதற்கு எரிபொருள்கள் இல்லை. இலங்கையில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கிலோமீற்றர் கணக்கில் வரிசைகள் நிற்பதை நாங்கள் காண்கின்றோம். உண்மையில் இது கவலைக்குரியது. இவையனைத்தையும் தாண்டித்தான் பல மக்கள் இந்தக் கிரிக்கெட்டுக்காகத்



தம்மை அர்ப்பணித்துள்ளனர் -என்றார்.

அவுஸ்திரேலிய அணியின் வீரர்களான மிச்செல் ஸ்ராக், சிமித் ஆகியோர் இலங்கையின் பொருண்மிய இடர்பாடு தொடர்பில் விளக்கி இலங்கைக்கு மனிதாபிமான உதவிகளை சர்வதேசம் செய்யவேண்டும் என்று முன்னதாகக் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## படர்கொடிகள் ஏதுமில்லை!

இலங்கைக்கு ஜப்பானிடம் இருந்து நிதியுதவிகள் கிடைக்காது என்று திட்டவட்டமாக அறிவித்திருக்கின்றார் இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிடேகி. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற சந்திப்பின்போது இந்தக் கருத்தை அவர் தெரிவித்துள்ளார். 'இலங்கைக்கு நிதியுதவிகள் வழங்கப்பட்டால், அந்த நிதியுதவிகளில் மோசடிகள் இடம்பெறலாம், அந்த நிதி தவறாக முகாமை செய்யப்படலாம்' என்று ஜப்பான் நிதியுதவி வழங்குவதில் இருந்து பின்வாங்குகின்றமைக்கான காரணத்தையும் அவர் பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தவே செய்துள்ளார்.

மே 9 கலவரத்துடன் மஹிந்த ராஜபக்ச பதவி விலகியதையடுத்து, பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்ற பின்னர் ரணில் முன்னெடுத்த முக்கிய நகர்வுகள் ஜப்பானை மையப்படுத்தியதாகத்தான் இருந்தன. சீனா, இந்தியா என்பவற்றுக்கு அப்பால் ஆசிய வட்டகையில் மூன்றாவது படர்கொம்பாக ரணில் ஜப்பானைத் தேர்ந்தெடுத்தார். மேற்கத்திய நாடுகளினதும் அமெரிக்காவினதும் ஆசியக் கூட்டாளியான ஜப்பானை வளைத்துப்போட்டால் மேற்கத்தேய உதவிகள், அமெரிக்க வரப்பிரசாதங்கள் கிடைக்கும். இலங்கை மீதான நம்பிக்கையை வைத்து அவை கிடைக்கின்றனவோ இல்லையோ ஜப்பானுக்காகவேனும் அந்த உதவிகள் நாட்டுக்கு கிடைக்கலாம் என்பதால் 'இலங்கைக்கான ஒரு மீட்பராக' ரணில் ஜப்பானை அடையாளப்படுத்தினார்.

ஆக மொத்தத்தில் இலங்கையின் 'இடர் மீட்பு வலயத்துக்கு' ஜப்பானே தலைமை. இலங்கைக்கான சர்வதேச உதவிகளை ஆசிய வட்டகையில் ஜப்பான் ஒருங்கிணைக்கும் என்பதான விம்பம் ரணிலால் ஏற்படுத்தப்பட்டது. ஆயினும் இந்த அரசியல் நரித்தனத்துக்கு நான் பகடைக்காய் அல்ல என்று தெளிவாக – உசாராக ஒதுங்கிச் சென்றுள்ளது 'இலத்திரனியல் தேசம்'.


உண்மையில் ஜப்பான் தூதுவருடைய இந்தக் கருத்து வெறுமனே அவருடைய தனிப்பட்ட கருத்தோ அல்லது ஜப்பானின் நிலைப்பாடோ அல்ல. அப்படியான சிறியதொரு வட்டத்துக்குள் இருந்து இந்தக் கருத்தை நாம் எடுத்துவிட முடியாது. உண்மையில், இலங்கை மீதான சர்வதேசப் பார்வைக்கான ஓர் உதாரணமாகவே – ஒருபானை சோற்றுக்கு ஒருசோறு பதமாகவே– மிசுகோஷி ஹிடேகியின் கருத்தைக் கொள்ளமுடியும். இன்னும் சொல்லப்போனால், 'எமக்கு உதவுங்கள்' என்று ஜப்பானை வைத்து ரணில் வியூகம் வகுக்க, ஜப்பானோ 'இலங்கையை நம்பிவிடாதீர்கள்' என்று 'சேம் சைட் கோல்' பதிவுசெய்து தூரமாக விலகியிருக்கின்றது.

இதற்காக, ஜப்பானையோ அல்லது அதன் தூதுவரையோ எள்ளளவேனும் குறைசொல்லிவிட முடியாது. அரசியல் –பொருளாதார – சமூக உறுதித்தன்மை இல்லாத நாட்டில் எந்த நாடுதான் முதலீடு செய்யும்? அனைத்துத் துறையிலும் ஊசலாடிக்கொண்டிருக்கும் ஒரு நாட்டுக்கு எந்த அடிப்படையில் சர்வதேச உதவிகள் கிட்டும்? இலங்கையின் ஆட்சியாளர்கள் மீது சர்வதேசம் நம்பிக்கை இழந்துவிட்டது. எப்போது அதிகாரக் கதிரைகளில் நிரந்தரமான மாற்றமொன்று ஏற்பட்டு நாட்டின் ஜனநாயகத் தன்மையும், அரசியல் உறுதித்தன்மையும் பலப்படுத்தப்படுகின்றதோ அன்றுதான் இலங்கைக்கு சர்வதேச உதவிகளுக்கான கதவுகள் திறக்கும். இதற்கு ஜப்பான் ஓர் எடுத்துக்காட்டு.

அதுவரை 'பொருளாதார மீட்புக்காக' உதவுதல் பற்றிச் சிந்திக்கக்கூட சர்வதேசம் தயாரில்லை. வேண்டுமானால், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுமைப்பாடான திட்டங்களான 'உணவுப் பாதுகாப்பு', 'குழந்தைகளுக்கான ஊட்டச்சத்து', 'மகளிர் மற்றும் கர்ப்பிணிகள் பாதுகாப்பு' என்பவற்றின் கீழ் சில மில்லியன் டொலர் யாசகம் கிடைக்கலாம். அதைத் தவிர, கோத்தாபய அண்ட் ரணில் கொம்பனி பதவிகளில் இருந்து வெளியேறும் வரை எந்தவொரு நாடும் இனிமேல் இலங்கைக்கு உதவப்போவதில்லை என்பதே யதார்த்தம்.

நாளொரு நல்வார்த்தை

"கோபத்துடன் செயற்படுபவனும், புயலில் கப்பல் விடுபவனும் சரிசமமான வர்கள்" - பீச்சர்



### நிதி மோசடிக்குச் சாத்தியம்

# இலங்கைக்கு ஜப்பான் நிதியுதவி வழங்காது!

### அந்த நாட்டுத் தூதுவர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 30**

**இலங்கைக்கு வழங்கப்படும் நிதியுதவிகள் தவறாக முகாமைத்துவம் செய்யப்படும் அபாயம் உள்ளதால் அந்தச் சூழ்நிலை மாறும்வரை இலங்கைக்கு ஜப்பான் நிதியுதவி வழங்காது என்று இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிடேகி தெரிவித்தார்.**



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் ஜப்பான் தூதுவருக்கும் இடையில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைக்கு வழங்கப்படும் நிதியுதவிகள் தவறாக முகாமைத்துவம் செய்யப்படும் ஆபத்து தொடர்ந்து உள்ளதாக ஜப்பான் கருதுகிறது. அதனால் இப்போதைக்கு ஜப்பான் நிதியுதவி அளிக்காது. இப்பொழுது உலக வங்கியுடனான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்காக இலங்கை சில உத்தரவாதங்களை அளிக்க வேண்டியிருக்கும். சில மாற்றங்களை செய்ய வேண்டியிருக்கும். அதன் பின்னர் நிதியுதவி அளிப்பது பற்றி ஜப்பான் பரிசீலிக்கும் - என்றார். (ம)

# நாடாளுமன்றின் இணையத்தில் எம்.பிக்களின் முகவரி நீக்கம்

கொழும்பு, ஜூன் 30

இலங்கை நாடாளுமன்றத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் இருந்து தற்போது நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் முகவரிகளும் நீக்கப்பட்டுள்ளன.

நாட்டின் தற்போதைய நிலைமையை கருத்திற்கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பாதுகாக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று நாடாளுமன்றத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் தற்போது நாடாளுமன்றத்தை பிரதி நிதித்துவப்படுத்தும் 225 உறுப்பினர்களின் கைபேசி இலக்கங்கள் , கொழும்பு மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் உள்ள அவர்களது வசிப்பிடங்களின் முகவரிகள் உள்ளடக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

நாளை

01.07.2022
வெள்ளிக்கிழமை
ஆனி 17

சுபநேரம் : 05.56 - 07.26
ராகுகாலம்: 10.26 - 11.56
உலக மருத்துவர்கள் தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஒரு மாதத்துக்குள்

# 10 பேரை காவு வாங்கிய துப்பாக்கிச் சூடுகள்



கொழும்பு, ஜூன் 30

கொழும்பு உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளில் ஒரு மாத காலப்பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களில் 10 பேர் உயிரிழந்துள்ளனர். இதில் களனி பொலிஸ் பிரிவுக்குபட்ட பகுதிகளிலேயே அதிகளவான உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளன.

இதேவேளை நேற்றுமுன்தினம் இரவு பேலியகொட ரயில் நிலைய வீதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பாதாள உலகக் குழுக்களிடையே ஏற்பட்ட மோதலில் இந்தத் துப்பாக்கிச்சூடு நிகழ்ந்துள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# நிராகரிக்கப்பட்ட பசளைக்கு மாற்றுப்பசளை தரமுடியாது

### சீனா அறிவிப்பு



கொழும்பு, ஜூன் 30

நிராகரிக்கப்பட்ட சீனப் பசளைக்குப் பதிலாகப் புதிய பசளை வழங்கமுடியாது என சீனா அறிவித்துள்ளது. சீன உர நிறுவனம் சார்பில் அந்த நாட்டின் முகவர் நிறுவனம் விவசாய அமைச்சின் அதிகாரிகளுடன் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாட லிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்பில் நிராகரிக்கப்பட்ட சேதனப் பசளைக்கு பதிலாக யூரியா பசளை வழங்க முடியுமா? என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர வினவினார். அதற்கு சீன முகவர் நிறுவனம் மறுத்துள்ளது.

இந்த நிலையில் அவர்களுடன்தொடர்ந்து கலந்துரையாடல் நடைபெறுகின்றது என விவசாய அமைச்சர் தெரிவித்துள்ளார். இதேவேளை இந்தியக் கடனுதவியின் கீழ் 65 ஆயிரம் மெற்றிக் தொன் உரத்தை தாங்கிய கப்பல் நாட்டை வந்தடைவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என தகவல் வெளியாகியுள்ளது.

அத்துடன் ஓமானில் இருந்து வரும் உரக்கப்பல் எதிர்வரும் 6ஆம் திகதிக்குப் பின்பே நாட்டுக்குள் பிரவேசிக்கவுள்ளது. (ச-இ)

# மரண அறிவித்தல்

தோற்றம்
23 . 05 . 1986



மறைவு
26 . 06 . 2022

## கழுகாசலமூர்த்தி றொஜிந்தினி (ஜெலா)

ஆரியகுளத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கழுகாசலமூர்த்தி றொஜிந்தினி (ஜெலா) கடந்த (26.06.2022) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கழுகாசலமூர்த்தி (பவி) கச்சதேவி தம்பதியரின் ஏக புத்திரியும், ஜெனிந்தன், கிஷாந்தன், கஜிந்தன், றொஜிந்தன் ஆகியோரின் பாசமிகு தங்கையும், ஜெயந்தா, சூட்டி, தர்சினி, நதியா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.07.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொட்டடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**70, ஸ்ரான்லி றோட்,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்:
**அண்ணன்மார்கள்**

**077 101 4884 , 077 850 3157, 077 462 4507**

(cs. 45398) (2.6)



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** முயற்சியில் வெற்றி கிடைக்கும். நல்லவர்கள் யார் என்பதைக் கண்டறிவீர்கள். நண்பர்களிடம் அளவோடு நெருங்குவது நல்லது. வியாபாரத்தில் விற்பனை சுமாராக இருக்கும்.

**இடபம்:** பணியிடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள். உழைப்பின் மூலம் கூடுதல் நன்மையைக் காண்பீர்கள். கனவு நனவாகும். வசதிகளை மேம்படுத்துவீர்கள்.

**மிதுனம் :** வியாபாரத்தில் லாபம் உண்டு. மகிழ்ச்சிகூடும். நண்பருடன் இருந்து வந்த மனஸ்தாபம் நீங்கும். பயணத்தால் நீங்கள் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்காது..

**கடகம்:** உங்களது செயல்களால் உறவினர் இடையே ஒற்றுமை அதிகரிக்கும்.பணியை சரியாகப் பயன்படுத்துவீர்கள். புதிய துறையில் ஈடுபடுவீர்கள். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**சிம்மம்:** சகபணியாளர்களின் ஒத்துழைப்பால் உங்களுக்கு நன்மை ஏற்படக்கூடும். சிலரது உண்மை முகம் தெரிய வருவதால் குழப்பம் ஏற்படும். தெய்வீக எண்ணங்கள் பெருகும்.

**கன்னி:** தொலைபேசி வழியாக வரும் செய்தி மனஅமைதியை மீட்கும். பணியிடத்தில் இருந்த நெருக்கடி அகலும். புதிய வாய்ப்பை நழுவ விடாதீர்கள். பணியிடத்தில் நடக்கும் நிகழ்வு பரபரப்பை ஏற்படுத்தும்.

**துலாம்:** உறவினர்களால் ஏற்பட்ட சிரமங்கள் இன்று நீங்கும். பகைவர் மனம் மாறுவர். தாயின் அன்பைப் பெறுவீர்கள். பிரச்சினை ஒன்று தீரும். நீங்கள் எடுத்த முயற்சி கைகூடும். தெளிவு பிறக்கும்.

**விருச்சிகம்:** உறவினர் விஷயத்தில் தலையிடவேண்டாம். ஒருவிஷயத்தை நினைத்து அதிகளவில் குழப்பம் அடைவீர்கள். வாகன வசதி அதிகரிக்கும். வியாபாரத்தில் வரவு சற்று உயரும்.

**தனுசு:** பயணத்தின்போது பொருள்களைக் கவனமாக வைத்துக்கொள்ளுங்கள். புதிய முதலீடுகள் செய்வதை சில காலத்துக்குத் தவிர்க்கவும். சக பணியாளர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

**மகரம்:** பொருளாதார நெருக்கடி சற்றே அகலும். நட்பு வட்டம் விரியும். புதிய வாய்ப்புக்களைப் பயன்படுத்த தயங்கவேண்டாம். குழந்தைகளால் ஏற்பட்ட சிரமம் நீங்கும்.

**கும்பம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிப்பதால் பேச்சில் கம்பீரம் பிறக்கும். சொந்தங்கள் உதவி வேண்டி உங்களைத் தேடிவருவர். கடன் பிரச்சினை தீரும். மனதில் மகிழ்ச்சி நிலவும்.

**மீனம்:** குழம்பிய மனநிலை தெளிவாகி உங்களின் செயற்பாடு மேம்படும். வீண் விவாதங்களைத் தவிர்க்கப்பாருங்கள். பரிசு வாங்குவீர்கள். உங்களின் புகழ் அதிகரிக்கும். பெரியோரின் ஆசி கிடைக்கும்.

# நூற்றாண்டில் முதன்முறையாக கடன் செலுத்த முடியாத நிலை!

## உக்ரைன் போரால் ரஷ்யாவுக்கு நெருக்கடி

மொஸ்கோ, ஜூன் 30

**உக்ரைன் மீது போர் தொடுத்ததால் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் பொருளாதாரத் தடையால் கடும் நெருக்கடியைச் சந்தித்து வரும் ரஷ்யா, நூற்றாண்டில் இதுவரை இல்லாத வகையில் முதன்முறையாக தனது வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.**

நேட்டோவில் இணைவதற்கு உக்ரைன் எடுத்த முயற்சிகளைக் கண்டித்து அந்த நாட்டுக்கு எதிராக ரஷ்யா இராணுவ நடவடிக்கையை முன்னெடுத்து வருகிறது.

இந்தப் போரால் உலகம் முழுவதுமே பொருளாதார அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளன.

இதனால் தங்கம், கச்சா எண்ணெய் விலை கடுமையாக உயர்ந்தன. உக்ரைன் மீதான தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் ரஷ்யாவிலிருந்து கச்சா எண்ணெய் இறக்குமதிக்கு தடைவிதிப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்தார்.

ரஷ்யாவின் கச்சா எண்ணெயை வாங்க அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் மறுத்துள்ளதால் ரஷ்யா மலிவு விலையில் இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு கச்சா எண்ணெய் விற்பனை செய்கிறது. இது மட்டுமன்றி ரஷ்யா மீது கடுமையான பொருளாதாரத் தடைகளும் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளால் விதிக்கப்பட்டுள்ளன. பொருளாதாரத் தடைகளைத் தொடர்ந்து உலக நிதிய அமைப்பில் இருந்து ரஷ்யா அந்நியப்பட்டுள்ளது. இதனால் பெரும் பொருளாதார நெருக்கடியை அந்நாடு சந்தித்து வருகிறது.

இந்தநிலையில் கடந்த நூற்றாண்டில் இல்லாதவகையில் ரஷ்யா தனது வெளிநாட்டு நாணயக் கடனை முதன்முறையாகத் திருப்பிச் செலுத்தவில்லை. ரஷ்யா பொருளாதாரப் பின்னடைவுக்குள் தள்ளப்பட்டதன் வெளிப்பாடே இது என்று பொருளாதார நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (ம)

# ஹிட்லர் படையில் பணியாற்றிய 101 வயது முதியவருக்கு சிறை

## ஜேர்மனி நீதிமன்றம் தீர்ப்பு

பெர்லின், ஜூன் 30

இரண்டாம் உலகப் போரின்போது ஹிட்லரின் நாஜி படையில் பணியாற்றிய 101 வயது முதியவருக்கு 5 வருட சிறைத்தண்டனை விதித்து ஜேர்மனி நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

2ஆம் உலகப் போரின்போது ஹிட்லர் தலைமையிலான நாஜி படைகள் ஜேர்மனி தலைநகர் பெர்லின் அருகே வதைமுகாம் அமைத்து 2 லட்சத்துக்கும் அதிகமான கைதிகளை அடைத்து வைத்திருந்தனர்.

அவர்களின் பல்லாயிரக்கணக்கான கைதிகள் பட்டினி, நோய், கட்டாய உழைப்பு மற்றும் பிற காரணங்களால் இறந்தனர். மேலும் ஆயிரக்கணக்கானோர் துப்பாக்கிச்சூடு, தூக்கிலிடுதல் மற்றும் விஷவாயுவை சுவாசிக்க வைத்தல் போன்ற தண்டனைகள் மூலம் கொல்லப்பட்டனர்.

இந்தநிலையில் நாஜி கால குற்றவாளிகள் மீது விசாரணை நடத்தி வரும் தற்போதைய ஜேர்மனி அரசு, 101 வயது முதியவருக்கு எதிராகக் கடந்த ஆண்டு விசாரணையைத் தொடங்கியது.

இவர் தனது 21 ஆவது வயதில் பெர்லினில் உள்ள வதை முகாமில் 3ஆயிரத்து 518 கைதிகளைக் கொலை செய்வதற்கு உதவினார் என்ற குற்றச்சாட்டில் அவருக்கு 5 வருட சிறைத்தண்டனை விதித்து ஜேர்மனி நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. (ச-இ)

## பாகிஸ்தானில்

# தொடர் மின்வெட்டு மக்கள் போராட்டம்

இஸ்லாமாபாத், ஜூன் 30

பாகிஸ்தானில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தொடர் மின்வெட்டுக் காரணமாக அந்தநாட்டு மக்கள் வீதியில் இறங்கிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடும் பொருளாதார நெருக்கடியில் தவித்து வரும் பாகிஸ்தானில் தற்போது மின்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக நாட்டின் பல பகுதிகளில் தொடர் மின்வெட்டு இடம்பெறுகின்றது.

தலைநகர் கராச்சியில் ஒரேநாளில் 12 முதல் 14 மணிநேரம் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் அந்த நகர மக்கள் கடும் நெருக்கடிக்குள்ளான நிலையில் ஆத்திரமடைந்து வீதியில் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். இதன் காரணமாக போராட்டத்தைக் கட்டுக்குள் கொண்டுவர அந்தநாட்டு பொலிஸார் கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசி போராட்டக்காரர்களை விரட்டியடித்து வருகின்றனர் எனவும் இதனால் அங்கு பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)



ஜி–7 மாநாட்டில் கலந்துகொண்டு ஜேர்மனி பயணத்தை நிறைவு செய்த இந்தியப் பிரதமர் மோடி நாடு திரும்பும்வேளை ஐக்கிய அரசு இராஜ்ஜியம் சென்று தற்போதைய ஐக்கிய அரபு இராஜ்ஜிய ஜனாதிபதி ஷேக் முகமது பின் சையத் அல் நஹ்யானை சந்தித்துள்ளார். இதன்போது இரு நாட்டின் உறவுகள் உட்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலம்பியா சிறைக்கலவரம்; தீயில் சிக்கி 51 கைதிகள் சாவு!

போகோடா, ஜூன் 30


கொலம்பியாவிலுள்ள சிறையொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 51 கைதிகள் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொலம்பியாவின் தென்மேற்குப் பகுதியில் அமைந்துள்ள பெரிய சிறையில் கடந்த திங்கட்கிழமை சிறைக்கைதிகள் திடீர் கலவரத்தில் ஈடுபட்டனர். இந்தக் கலவரத்தின்போது சிறையில் தீப்பற்றியதில் தீயில் சிக்கி 51 கைதிகள் உடல் கருகி உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் பலத்த தீக்காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அந்தநாட்டு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

# தற்சார்பு நடவடிக்கைகள் மூலமாக தமிழரே தன்னிறைவு காணுங்கள்!

## வாராந்த கேள்வி - பதிலில் விக்னேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு



தற்சார்பு நடவடிக்கைகள் மூலம் இலங்கையின் தமிழகம் தன்நிறைவு காணவேண்டும். தமிழர்களாகிய நாங்கள் வரலாற்று ரீதியான பாரம்பரியம் உடையவர்கள். நாம் எம்மைப் பாதுகாத்துப் பராமரிக்கக் கற்றுக் கொள்ளவேண்டும். மற்றவர்களிடம் கையேந்துவதை வெட்கக்கேடான செயலாகப் பார்க்கக் கற்றுக்கொள்ளவேண்டும்.

எனவேதான் நாம் தற்சார்பு நடவடிக்கைகளில் ஈடுபட முன்வரவேண்டும்- இவ்வாறு தனது வாராந்த கேள்வி - பதில் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் வடமாகாண முன்னாள் முதலமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

பஞ்ச நிலைமையும் அதுசார்பான இடர்பாடுகளும் வருங்காலத்தில் அதிகரிக்க இடமுண்டு. திருட்டுக்கள், கொள்ளைகள் பெருவாரியாக நடைபெற வாய்ப்பிருக்கின்றது. முக்கியமாக சைக்கிள் திருட்டுக்கள் அதிகரிக்கலாம். ஆகவே தற்போது நாம் வருங்காலத்தைப் பற்றித் திட்டமிட வேண்டியுள்ளது. இன்றைய நிலைக்கு யார் காரணம், அவர்களுக்கு நாம் என்ன தண்டனை வழங்க வேண்டும்? எவ்வாறு இன்றைய நிதி நிலைமையைச் சீராக்கலாம் என்று சிந்திப்பதைக்காட்டிலும் இனி வருங்காலத்தில் எமது மக்கள் தமது துயர் நீக்க என்ன செய்ய வேண்டும் என்பதே இன்றைய முக்கியமான கேள்வியாக இருக்கின்றது.

**புலிகளின் காலத்தில் தற்சார்பு போரின் பின் பிச்சைப் பாத்திரம்**

தமிழர்களாகிய நாங்கள் வரலாற்று ரீதியான பாரம்பரியம் உடையவர்கள். 'மதியாதார் முற்றம் மதித்தொருகால் மிதியாமை கோடி பெறும்' என்றார் ஔவையார். எம்மை மதியாத சிங்கள அரசாங்கத்தை மதித்து அவர்களிடம் இருந்து உதவிகளை எதிர்பார்த்துக் கொண்டிருப்பது காலத்தை வீணடிப்பதாகும். நாம் எம்மைப் பாதுகாத்துப் பராமரிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். மற்றவர்களிடம் கையேந்துவதை வெட்கக்கேடான செயலாகப் பார்க்கக் கற்றுக் கொள்ளவேண்டும். எனவேதான் நாம் தற்சார்பு நடவடிக்கைகளில் ஈடுபட முன்வர வேண்டும்.



எம்மீது நம்பிக்கை வைத்து எமக்குத் தேவையானவற்றை நாமே தயாரிப்பதே தற்சார்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவது. புலிகள் காலத்தில் நாம் தற்சார்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தோம். போரின் பின்னர் பிச்சைப் பாத்திரம் ஏந்தப் பழகிக் கொண்டுள்ளோம். எதற்கும் மற்றவர்களை எதிர்பார்ப்பதே இன்றைய எமது கலாசாரம். அரசாங்கம் என்ன தருவார்கள், உத்தியோகப் பற்றற்ற அமைப்புக்கள் என்ன தருவார்கள், கொடையாளர்கள் என்ன தருவார்கள், எமது வெளிநாட்டு உறவுகள் என்ன தருவார்கள் என்றெல்லாம் உதவிகளை எதிர்பார்த்து நிற்கின்றோம். எமது வாழ்க்கையை நாமே முன்னேற்ற நாம் என்ன செய்ய வேண்டும் என்று பொதுவாக எம்மவர்கள் சிந்திப்பதாகத் தெரியவில்லை.



நாங்கள் இன்றைய நிலைமையை எமக்குச் சாதகமாக மாற்றவேண்டும். எமது கட்சி 2018லேயே தன்னாட்சி, தற்சார்பு, தன்நிறைவு என்ற வாசகங்களைக் கட்சியின் எதிர்பார்ப்புக்களாக முதல்நிலைப் படுத்தியிருந்தது.

அரசியலில் கூட்டு சமஷ்டி முறையிலான தன்னாட்சி, சமூக ரீதியாகவும் தனிநபர் ரீதியாகவும் தற்சார்பு, பொருளாதார ரீதியாக தன்நிறைவு என்பவையே எமது குறிக்கோள்களாக இருந்து வருகின்றன. அரசியலில் தன்னாட்சி பெற நாம் உழைத்துக்கொண்டே மக்களைத் தற்சார்பு நடவடிக்கைகளில் ஈடுபடுங்கள் என்று ஊக்குவித்து வருகின்றோம்.

தற்சார்பு நடவடிக்கைகள் மூலம் இலங்கையின் தமிழகம் தன்நிறைவு காணவேண்டும் என்று கூறி வருகின்றோம். அன்று நாம் கூறியவற்றையே இன்று யாவரும் கூறிவருகின்றார்கள்.

வடக்கு -கிழக்கு தமிழ் மக்களின் இன்றைய நிலைமை என்ன என்று கேட்டால் நாம் யாவரும் ஸ்தம்பித்து நிற்கின்றோம் என்பதுதான் இன்றைய நிலைமை. இதிலிருந்து விடுபட்டு தற்சார்பு நடவடிக்கைகளில் நாம் ஈடுபட வேண்டும். எம்மை நாடி வந்திருக்கும் இன்னல்கள் எம்மைச் சுயபலத்துடன் சிந்திக்கவும் செயலாற்றவும் உதவி புரியவேண்டும். சேர்ந்து செயலாற்ற நாம் இனிப் பழகிக் கொள்ளவேண்டும். உதாரணத்துக்கு அயலவர் நால்வர் தத்தம் வாகனங்களுக்கு எரிபொருள் வாங்கித் தனித்தனியாகத் தமது வாகனங்களை ஓட்டுவதிலும் பார்க்க ஒவ்வொரு வரும் சுழற்சி முறையில் மற்றைய மூவரையும் தமது வாகனங்களில் ஏற்றிச் செல்வது எரிபொருள் சேமிப்புக்கு உதவும் மற்றும் அயலவரிடையே அன்னியோன்னியத்தையும் வளர்க்கும்.

**கண்டுபிடிப்புக்கள் தேவையாகவுள்ளன**

இன்று இளைஞர், யுவதிகள் தமது காலத்தை வீணடிக்காமல் புதிய புதிய கண்டுபிடிப்புக்களை வெளிக்கொண்டுவர எத்தனிக்க வேண்டும். செயற்கை உரம் இல்லாது இயற்கை உரத்தாலேயே போதிய அறுவடையைப் பெற முடியுமா? என்று சிந்திக்க வேண்டும். போக்குவரத்தை இலகுவாக்க என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று ஆராயலாம். 'தேவைதான் கண்டுபிடிப்புக்களின் தாய்' என்பார்கள். எமக்கு இன்று தேவைகள் பல இருக்கின்றன. அவற்றைப் பூர்த்தி செய்ய எந்தவிதமான புதிய யுக்திகளைக் கையாளலாம் என்று எம் மக்கள் சிந்திக்கவேண்டும்.

சும்மா அரசாங்கத்தையும் மற்றவர்களையும் குறைகூறுவதை நிறுத்தி தற்போதைய சவால்களை நாம் எவ்வாறு முறியடிக்கலாம் என்பது பற்றிச் சிந்திக்கவேண்டும்.

ஆகவே இன்றைய நிலைமையை எமக்கு இறைவன் ஈந்த ஒரு வரப்பிரசாதமாகவே நான் பார்க்கின்றேன். வீட்டுத்தோட்டத்தை வளர்த்து வருகின்றோம். காரியாலய காணியில் தோட்டம் அமைத்துள்ளோம். மேலும் தோட்ட நிலமொன்றைக் குத்தகைக்கெடுத்துப் பலவித பயிர்களை அங்கு பயிரிட்டு உருவாக்கி வருகின்றோம். நாட்டின் பொருளாதார நிலைமை சீரடையப் பல மாதங்கள் ஆகும். அதற்கிடையில் பட்டினி, பஞ்சம், நோய் நொடிகள் எம்மைப் பாதிக்காத மாதிரி நாம் நடந்து கொள்ளவேண்டும். காணிகளை வெறுமனே இருக்கவிடாதீர்கள். பயிரிடுங்கள்! வங்கியில் கடன்பெற்றாவது உங்கள் தரிசு நிலங்களை வளம் கொழிக்கும் நிலங்களாக மாற்ற எத்தனியுங்கள். இன்றைய எமது நிலைமை எம்மை தன்னாட்சி, தற்சார்பு, தன்நிறைவு நடவடிக்கைகளில் ஊக்கமுடன் பயணிக்க உறுதுணையாக இருக்கவேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன் - என்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மடுமாதா திருத்தலத்துக்கான பாதயாத்திரை நேற்று நிறைவு

யாழ்ப்பாணம், ஜூன் 30

மன்னார் மடுமாதா திருத்தலத்துக்கு வடமராட்சி கிழக்கில் இருந்து கடந்த 27 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமான பாதயாத்திரை நேற்று நிறைவடைந்தது.

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கப்பலேந்தி மாதா ஆலயத்திலிருந்து ஆரம்பமான பாதயாத்திரை பளை, கிளிநொச்சி, முறிகண்டி சென்று அங்கிருந்து கொக்காவில் வீதி வழியாக ஐயன்கன்குளம் வரை சென்று மல்லாவி வழியாக நட்டாங்கண்டலைச் சென்றடைந்து, மடு திருத்தலத்தை நேற்று சென்றடைந்தது.

மடு திருத்தலத்தின் உற்சவம் நாளைமறுதினம் 2 ஆம் திகதி நடைபெறவுள்ளதை முன்னிட்டு குறித்த பாதயாத்திரை மேற்கொள்ளப்பட்டது.

(ஒ-14-19)

## மன்னாரிலும்
## பங்கீட்டு அட்டைக்கே எரிபொருள் விநியோகம்

மன்னார், ஜூன் 30

மன்னாரில் எரிபொருள் பங்கீட்டு அட்டை மூலம் எரிபொருள் விநியோகிக்க மன்னார் பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாடு எதிர்கொண்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக எரிபொருள் வழங்குவதற்கு ஏதுவாக எரிபொருள் விநியோக அட்டையை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் விநியோக அட்டை வழங்கலின் போது வாகன உரிமையாளர்களே விநியோக அட்டைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அத்துடன் விநியோக அட்டை பெறுவதற்கு வரும்பொழுது குடும்ப அட்டை, வாகன உரிமைப்பத்திரம், வாகன உரிமையாளரின் தேசிய அடையாள அட்டை மற்றும் நடப்பு வருட வரி அனுமதிப்பத்திரம் ஆகியவை கொண்டுவரப் படவேண்டும்.

குறித்த அறிவுறுத்தல்களைப் பின்பற்றி எரிபொருள் அட்டையைப் பெற்றுக்கொள்ளுமாறு மன்னார் பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

(ஒ-14-60)



கொடிகாமம் - இராமாவில் கந்தசுவாமி ஆலயத்தின் தீர்த்தத் திருவிழா பல ஆயிரம் பக்தர்கள் புடைசூழ நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மிகச்சிறப்பாக இடம்பெற்றது. இதன்போது பக்தர்கள் தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர். (ஒ-14-159)

# 'கிராம அலுவலர்களின் கடமை அத்தியாவசியம் இல்லையா?'

### எமக்கும் எரிபொருள் வேண்டும்
### சங்கானையில் கிராம அலுவலர்கள் போராட்டம்




**யாழ்ப்பாணம், ஜூன் 30**

**சங்கானை பிரதேச செயலகத்தின் 25 கிராம அலுவலர் பிரிவுகளில் கடமையாற்றும் கிராம அலுவலர்கள் தமக்கு எரிபொருள் பெற்றுத் தருமாறு கோரி பிரதேச செயலகத்தின் முன்பாக நேற்றுக் காலை கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

இதன்போது 'அரச அலுவலர்களை அவமதிக்காதே', 'பெற்றோல் மாபியாக்கள் ஒழிக' 'கிராம அலுவலர்கள் புறக்கணிக்கப்படுவது நியாயமா?' 'கிராம அலுவலர்கள் அத்தியாவசிய சேவையில் உள்ளடக்கப்படவில்லையா?' 'கொரோனா முடக்க காலத்தில் மட்டும் எம் தேவை. இப்போது இல்லையா?' என்ற பதாகைகளை ஏந்தியாவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுதொடர்பில் யாழ்.மாவட்ட கிராம அலுவலர் சங்கத்தின் தலைவர் கணேசலிங்கம் தெரிவிக்கையில், கிராம அலுவலர் பிரிவு, மக்களின் அத்தியாவசிய சேவையாகக் காணப்படுகிறது. கொரோனா முடக்க காலத்தில் எமது பங்களிப்பு அளப்பரியது.

எமது பிரதேச செயலர் பிரிவுக்கு ஒரேயொரு எரிபொருள் நிரப்பு நிலையம் காணப்படுகிறது. அந்த எரிபொருள் நிரப்பு நிலையம் பிரதேச செயலகத்தின் கட்டுப்பாட்டுக்குள் இயங்கவேண்டும் என மாவட்ட செயலாளரால் தெரிவிக்கப்பட்டாலும் எரிபொருள் மாபியாக்களுக்கே எரிபொருள் வழங்கப்படுகிறது. எமது பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு வழங்கப் படுவதில்லை.

எனவே எமக்குரிய எரிபொருள் சீராகக் கிடைக்கப்பெறாதுவிடின் இனிவரும் காலங்களில் கிராம அலுவலர் சங்கத்தோடு சமுர்த்தி மற்றும் ஏனைய அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கங்களும் இணைந்து போராட வேண்டிய நிலை ஏற்படும்- என்றார். (ச-125)

## சமுர்த்தி அலுவலர்களுக்கும் எரிபொருள் சீராக வழங்குங்கள்

### மாவட்டச்செயலருக்கு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ்.மாவட்டத்தில் கடமையில் ஈடுபடும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு எரிபொருளை சீராக வழங்க வேண்டும் என்று யாழ்.மாவட்டச்செயலருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தால் மாவட்டச்செயலருக்கு அனுப்பப்பட்ட கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எரிபொருளைப் பெற்றுக் கொள்வதில் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இதனால் பொதுமக்களால் உத்தியோகத்தர்கள் அவமானப்படும் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

எரிபொருள் நெருக்கடியால் வங்கிகள், மகா சங்கங்களில் கடமையாற்றும் அலுவலர்கள் உரிய நேரத்துக்கு கடமைக்கு சமுகமளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆகையால் வரவைப் பதிவு செய்யும் இயந்திரப் பாவனையை சிறிது காலம் நிறுத்தி பதிவேட்டில் கையொப்பமிடும் நடைமுறையை ஒழுங்கு செய்ய வேண்டும். அத்துடன் எமது உத்தியோகத்தர்களுக்கு சுழற்சிமுறை கடமை வழங்க வேண்டும்.

மேலும் உத்தியோகத்தர்களின் களக் கடமைகள் தொடர்பான சுற்றறிக்கைப் படி சில பிரதேசசெயலகங்கள் செயற்படுவதில்லை. தற்போது எரிபொருள் நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கும் எமது உத்தியோகத்தர்கள் மிகுந்த அழுத்தங்களை சந்தித்துள்ளனர்.

எனவே இதற்கு உரிய தீர்வைப் பெற்றுக்கொடுத்து, சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எரிபொருளை சீரான முறையில் பெற்றுக்கொள்வதற்கும் ஆவன செய்ய வேண்டும் -என்றுள்ளது. (ஒ-14-159)

## எரிபொருள் தட்டுப்பாட்டால்
## அம்பலப்பெருமாள் குளத்தில் சிறுபோக அறுவடை சிரமம்

### விவசாயிகள் நெருக்கடியில்

முல்லைத்தீவு, ஜூன் 30

எரிபொருள் தட்டுப்பாட்டால் முல்லைத்தீவு அம்பலப்பெருமாள் குளத்தில் சிறுபோக நெற்செய்கை அறுவடை மேற்கொள்வதில் விவசாயிகள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

அம்பலப்பெருமாள் குளத்தின் கீழ் 330 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. எரிபொருள் நெருக்கடியால் அறுவடை மேற்கொள்வதில் விவசாயிகள் பல சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஊடாக எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்கு விவசாயிகள் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

சிறுபோக பயிர்ச்செய்கைத் தொடக்கத்திலும் நிலப் பண்படுத்தலுக்கும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஊடாகவே எரிபொருளைப் பெற்று விதைப்பில் விவசாயிகள் ஈடுபட்டனர். ஆனால் தற்போது எரிபொருளைப் பெற்றுக்கொள்ள முடியாமல் இருப்பதாக அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளனர். எனவே எரிபொருள் விரைவாகக் கிடைப்பதற்கு அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (ஒ-14-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிபொருள் நெருக்கடி

# அவசரமாக 40,000 மெற்றிக்தொன் இந்தியாவிடம் இருந்து பெற முயற்சி!

**கொழும்பு, ஜுன் 30**

**நாட்டில் நிலவுகின்ற எரிபொருளுக்கான கடும் நெருக்கடி காரணமாக இந்தியாவிடமிருந்து உடனடியாக 40 ஆயிரம் மெற்றிக் தொன் எரிபொருளை கொள்வனவு செய்ய முயற்சிகள் இடம்பெறுகின்றன.**

முதற்கட்டமாக இந்தியாவிடமிருந்து டீசலை இறக்குமதி செய்து அதன் பின்பு தேவைக்கேற்ப பெற்றோல் பெறப்படவுள்ளது.

இந்த நடைமுறை சாத்தியமாக ஒருவாரகாலமாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை எரிபொருளை கொள்வனவு செய்ய சிறிலங்கா 700 மில்லியன் அமெரிக்க டொலரை இந்தியாவிடமிருந்து கடனாகப் பெற்றுள்ளது.

எனினும் இது நெருக்கடிக்கு போதாமையால் மேலும் 500 மில்லியன் அமெரிக்க டொலரையும் கடனாக சிறிலங்கா அரசு கோரியுள்ளது.

இது தொடர்பில் இரு நாடுகளிடையேயும் பேச்சு இடம்பெற்று வருகின்றது என அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதேவேளை ரஷ்யாவிடமிருந்து தள்ளுபடி விலையில் இந்தியா எரிபொருளை கொள்வனவு செய்து வரும் நிலையில் அதே விலையில் இலங்கைக்கும் எரிபொருளை கொள்வனவு செய்யும் திட்டம் ஒன்றை இந்தியாவுக்கான இலங்கைத் தூதர் மிலிந்த மொரகொட சமர்ப்பித்து பேச்சு நடத்தி வருகின்றார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## முதலாம் காலாண்டில் 1.6 ஆக பொருளாதாரம் வீழ்ச்சி

கொழும்பு, ஜுன் 30

இலங்கையின் பொருளாதாரம் 2022ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 1.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

இலங்கையின் தேசிய கணக்குகள் மற்றும் மதிப்பீடுகள் தொடர்பான முதலாம் காலாண்டுக்கான அறிக்கை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரங்கள் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில்;

இந்த ஆண்டின் முதலாம் காலாண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதம் 1.6 சதவீதமாக வீழ்ச்சி கண்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் 4 நேர் சதவீதமாக காணப்பட்ட பொருளாதார வளர்ச்சி வீதம், இந்த ஆண்டின் முதல் காலாண்டில் 1.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

தற்போதைய பணவீக்கம், அந்நிய செலாவணி மதிப்பிழப்பு மற்றும் டொலர் பற்றாக்குறை போன்றவற்றால் பொருளாதார வளர்ச்சி வீதம் குறைவடைந்து செல்கிறது - என்றுள்ளது. (ச-இ)

# மீட்கப்பட்ட சிறுமி

## உயிரை மாய்க்க முயற்சி

கொழும்பு, ஜுன் 30

கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இளைஞர்களால் கடத்தப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்ட நிலையில், கிளிநொச்சியில் மீட்கப்பட்ட 17 வயதுச் சிறுமி நேற்று உயிரை மாய்த்துக் கொள்ள முயன்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மீட்கப்பட்ட சிறுமி கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில், நேற்றுப் பிற்பகல் நோயாளர் விடுதியில் இருந்து கீழே வீழ்ந்ததில் படுகாயமடைந்துள்ளார்.

சிறுமி தற்போது அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். அதேவேளை- சிறுமி கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம், இராசாவின் தோட்டத்தைச் சேர்ந்த ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (எ-125)



## ஆசிரியர்களை கட்டாயப்படுத்தி பாடசாலைக்கு அழைக்க வேண்டாம்

கொழும்பு, ஜுன் 30

நாட்டின் தற்போதைய எரிபொருள் நெருக்கடி நிலைமையில் ஆசிரியர்களைக் கட்டாயப்படுத்தி பாடசாலைக்கு அழைக்கும் செயற்பாடு வன்மையாகக் கண்டிக்கத்தக்கது என இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்ததாவது:-

தற்போதைய எரிபொருள் நெருக்கடியைக் கருத்திற்கொண்டு கல்வி அமைச்சினால் அறிவிக்கப்பட்டதன்படி பாடசாலைகளுக்கு சமுகளிக்கமுடியாத ஆசிரியர்களுக்கு விசேட விடுமுறை அறிவிக்கப்படும். ஆகவே ஆசிரியர்கள் அச்சமடைந்து செயற்பட வேண்டாம் -என்றார். (ச-இ)

## இரண்டு ஒப்பந்தங்கள் மூலம்

# அமெரிக்காவிடமிருந்து 37 மில்லியன் டொலர்

கொழும்பு, ஜுன் 30

அமெரிக்காவின் எம்.சி.சி. உடன்படிக்கையின் கீழ் 480 மில்லியன் டொலரைப் பெறுவதை கோத்தாபய ராஜபக்ச அரசாங்கம் நிராகரித்து இரண்டு வருடங்களின் பின்னர், அமெரிக்காவிடமிருந்து உதவித் தொகையொன்றை பெறும் இரண்டு திட்டங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது.

இந்த இரண்டு உடன்படிக்கைகள் ஊடாக அரசாங்கத்துக்கு 37 மில்லியன் டொலர் கிடைக்கவுள்ளது. ஜனநாயக நல்லாட்சி மற்றும் சமூக ஒருமைப்பாட்டுக்கான ஒத்துழைப்பை வலுப்படுத்துதல், பேண்தகு மற்றும் மூடப்பட்ட பொருளாதார வளர்ச்சியை உருவாக்குதல் ஆகிய இரண்டு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்ட திட்டங்களுக்கே அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (ம)

# வதிவிட நுழைவிசைவு காலம் அதிகரிப்பு

கொழும்பு, ஜுன் 30

இலங்கையர்கள் அல்லாதவர்கள் இலங்கையர் ஒருவரைத் திருமணம் செய்யும்போது வழங்கப்படும் வதிவிட நுழைவிசைவுக் காலம் நீடிக்கப்படவுள்ளது.

இதுவரை ஒரு வருட வதிவிட நுழைவிசைவு அனுமதி வழங்கப்பட்டிருந்த நிலையில், எதிர்வரும் திங்கட்கிழமை முதல் 5 வருட வதிவிட நுழைவிசைவு அனுமதி வழங்கப்படும் என்று முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் தம்மிக்க பெரேரா தெரிவித்துள்ளார். (எ-இ)

## மறுவாழ்வு...

அவர்களுக்குச் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. அங்கு 998 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு அங்குள்ள இரு குழுக்களிடையே மோதல் ஏற்பட்டுள்ளது. அதில் மோதரையைச் சேர்ந்த 36 வயதான கைதி ஒருவர் உயிரிழந்தார். அதையடுத்து அங்கு பதற்றம் அதிகரித்தது. பதற்ற நிலைமையைப் பயன்படுத்தி மறுவாழ்வு மையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 500 பேர் அங்கிருந்து தப்பியோடினர்.

தப்பியோடியோரைத் தேடும் நடவடிக்கையில் இராணுவத்தினரும், பொலிஸாரும் ஈடுபடுத்தப்பட்டிருந்த நிலையில் நேற்று மாலைவரையில் 232 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை - மறுவாழ்வு நிலையத்தில் உள்ளவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என்றும், பாதுகாப்புத் தரப்பினரை உள்ளே அனுமதிக்கவில்லை என்றும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-எ-22)

## உகந்த தீர்வு வழங்காவிடின்

# திங்கள் முதல் காலவரையின்றி பணிப்பகிஷ்கரிப்பு தொடரும்

## சுகாதார தொழிற்சங்கத்தினர் சீற்றம்

கொழும்பு, ஜுன் 30

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் உட்பட துணை கூட்டு சுகாதார தொழிற்சங்கத்தின் எட்டுத் துறைகள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளன.

இது தொடர்பில் தொழிற்சங்கக் கூட்டமைப்பின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்ததாவது:-

எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் போக்குவரத்து தொடர்பான சிக்கல்களால் ஏமது துறையும் பெரும் நெருக்கடியைச் சந்தித்துள்ளது. இதனால் இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

பொது சுகாதார பரிசோதகர்கள், குடும்ப சுகாதார அதிகாரிகள், ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர்கள், பூச்சியியல் வல்லுநர்கள் எனப் பல துறையினரும் பணியைப் புறக்கணித்துள்ளனர்.

அத்துடன் மருத்துவமனைகளில் உள்ள பி.எச்.ஐ. அதிகாரிகள், இ.சி.ஜி. மற்றும் இ.சி.ஜி. தொழில்நுட்ப வல்லுநர்கள், மலேரியா மற்றும் டெங்கு பரிசோதகர்கள், பல் மருத்துவ சங்கங்கள் மற்றும் கொரோனாத் தடுப்பூசி நிர்வாகிகள் அடுத்த இரண்டு நாள்களுக்கு பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர்.

இதன்காரணமாக போதனா மற்றும் ஆதார மருத்துவமனைகள் தவிர்ந்த பொது மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட மருத்துவமனைகளில் மருந்து விநியோகம் தடைப்படும்.

எமக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுகள் வழங்கப்படாவிடின் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் காலவரையற்ற பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படும் -என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஸ்வலிங்க மகா கணபதி அலங்கார உற்சவம்

யாழ்.ஜூன் 30

வண்ணார்பண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க மகா கணபதி கோவில் (பன்றிக்கோட்டுப் பிள்ளையார்) அலங்கார உற்சவம் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது. உற்சவத்தின் பத்தாம் நாளான எதிர்வரும் புதன்கிழமை முற்பகல் 10.55 மணிக்கு தீர்த் தோற்சவம் நடைபெறுவதுடன் பிற்பகல் ஒரு மணிக்கு மாகேஸ்வர பூஜையும் இடம்பெறும். அன்றைய தினம் மாலை 5.15 மணிக்கு திருவூஞ்சலைத் தொடர்ந்து மாலை 6 மணிக்கு பிரப்பங்குளம்வீதி, மானிப்பாய் வீதி, ஓட்டுமடம் வீதி, கே.கே. எஸ். வீதி வழியாக விநாயகப் பெருமான் சித்தி புத்தி சமேதராக வெளிவீதியுலா வந்து ஆலயம் சேர்வார். (எ)

## வலி.மேற்கு சமுர்த்தி உத்தியோகத்தர்கள் பணிப்புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 30

பெற்றோல் வழங்க நடவடிக்கை எடுக்கப்படாததமையைக் கண்டித்து வலிகாமம் மேற்குப் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இன்று முதல் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை அறிவித்துள்ளனர்.

அத்தியாவசிய சேவையாக நேற்றுச் சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இதுவரை எமக்குரிய எரிபொருள் வழங்கப்படவில்லை. அதனால் எம்மால் கடமைக்குச் செல்ல முடியவில்லை.

ஆகையால் இன்று முதல் தீர்வு கிடைக்கும் வரையில் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை நடத்தத் தீர்மானித்துள்ளோம். இதனால் ஏற்படும் அலுவலக இடையூறுகளுக்கு மனம் வருந்துகின்றோம் என்று வலி.மேற்குப் பிரதேச செயலக சமுர்த்தி உத்தியோகத்தர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (எ-இ)

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 . 05 . 1963



மறைவு 16 . 07 . 2015

### திரு. நந்தகுமார் இராசலிங்கம்

திதி: ஆனிமாத பூர்வபக்ஷ பிரதமை (30.06.2022)

ஆண்டுகள் ஏழு நகர்ந்து மறைந்திடினும்
ஆறுமோ வெந்துயர் அன்பு அப்பாவே!
மாண்டுவிடவில்லை நீங்கள் எம்மனங்களில்
மறையாது என்றும் வாழ்கிறீர்கள் - எம்
உயர்வுக்கு உன்னத வழிகாட்டி, வாழ்வை
அர்ப்பணித்த பாசத்தின் தீபமே!
உங்கள் நினைவு எங்கள்
நெஞ்சங்களில் என்றும் நிலைத்து வாழும்.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 11.05.1969

### சச்சிதானந்தன் துஷ்யந்தன்

மறைவு 24.06.2022



கேணியடி, திருநெல்வேலியை பிறப்பிடமாகவும், கண்டி மற்றும் மலேசியாவை வதிவிடமாகவும் கொண்ட சச்சிதானந்தன் துஷ்யந்தன் கடந்த (24.06.2022) அன்று மலேசியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சச்சிதானந்தன் சறோஜினிதேவி தம்பதியின் மகனும், சியாமளாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஜெயலட்சுமி, ஜெகதீசன், தயாபரன் ஆகியோரின்சகோதரனும், நிஷாந்தன், விதுஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரசாத், ஜெசிந்தியா, உருத்திரா ஆகியோரின் மாமனும், உமாசங்கரி, உதயன் ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (28.06.2022) அன்று மலேசியாவில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

141, கேணியடி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(CS 19853) 1-6

தகவல் : மனைவி, பிள்ளைகள்.
076 4833 449

## சித்திரத் தேர் வெள்ளோட்டம்

யாழ்., ஜூன் 30

சுன்னாகம், கந்தரோடை ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாதர் திருக்கோயில் புதிய சித்திரத் தேர் வெள்ளோட்டம் எதிர்வரும் 4ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெறவுள்ளது. அன்று தேர்த் தரிப்பிடம் அமைத்தோரைக் கௌரவிக்கும் நிகழ்வுடன், தேர் வெள்ளோட்ட சிறப்பு மலர் வெளியீடும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 19 . 07 . 1956



இறைவன் அடியில் 23 . 06 . 2022

### வினாசித்தம்பி கலாதரன்

யாழ். இணுவில் மேற்கு, செகராசசேகர பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Schwerte ஐ வதிவிடமாகவும் கொண்ட வினாசித்தம்பி கலாதரன் கடந்த (23.06.2022) வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இணுவிலை சேர்ந்த வினாசித்தம்பி - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், இணுவிலை சேர்ந்த கணபதிப்பிள்ளை - ஜனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், குலமதி அவர்களின் பாசமிகு கணவரும், கஜனவி (ஜேர்மனி), கஸ்தூரி (ஜேர்மனி), காருஷன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், இரகீதன், ஜீவகன் (கண்ணா) ஆகியோரின் அன்பு மாமனாரும், கங்காதரன், தேவகி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம், வத்சலா, செந்தில்குமார், றஜீவி மற்றும் ஜெயவதனா ஆகியோரின் மைத்துனரும், கோபிநாத், கோபிசங்கர், சாரங்கா, அர்ச்சனா, கோபிவிதுரன், செந்தூரி, செந்நிலானி, செந்துசன், செஞ்சீவ் ஆகியோரின் அன்பு மாமனாரும், அங்கேலிக்கா, யான்சி, கெங்காதரன், சுரேஸ்குமார், தர்சன், அனுஷாந்த் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், இலக்கியன், சேகரன், செழியன், சாந்தனு, சுப்ரயா, சயனுயா, அனயா, அஷ்சயா, நேத்திரன், சர்வயா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2022) வியாழக்கிழமை 9.00 a.m - 12 - 00 p.m Horderstr. 37158239 Schwerte, Germany யில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(எ 37832) (2.6)

தகவல்:
வினாசித்தம்பி குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 28 . 06 . 1942



இறப்பு 29 . 06 . 2022

### திருமதி செல்வராஜா தங்கம்மா

மாசிவன் நீர்வேலி மேற்கு நீர்வேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராஜா தங்கம்மா அவர்கள் நேற்று (29.06.2022) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா அன்னப்பிள்ளை தம்பதியினரின் இரண்டாவது மகளும் செல்வராஜா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இளையதம்பி சின்னாச்சிப்பிள்ளையின் அன்பு மருமகளும் கிருஷ்ணபவான் (UK), தேவகி (ஆசிரியை), ரேவதி (ஆசிரியை), லோகானந்தன் (UK), நித்தியானந்தன் (UK) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுகிர்தா (UK), யோகேந்திரன் (ஆசிரியர்), குமரஸ்ரீ (ஆசிரியர்), சுகன்யா (UK), நுஸுட்ஜலா (UK) ஆகியோரின் மாமியாரும் துஷானி, யனோஜன், தனுஷன், வேணுசன், மதுர்ஷன், கவிஷாயினி, கலையரசி, எழிலவன், நிலக்ஷி, லக்ஷன், சௌமி ஆகியோரின் அன்பு பேர்த்தியும் அமரர் பூரணம், அமரர் இராசையா, அமரர் தம்பிராசா, பரமேஸ்வரி, அமரர் திரவியம், அமரர் சந்திரசேகரம், தவமணிதேவி ஆகியோரின் சகோதரியும் அமரர் இராசசிங்கம், சற்குணதேவி, தங்கராசா, செல்வரட்ணம், தெய்வானப்பிள்ளை, கோணேசமூர்த்தி ஆகியோரின் மைத்துனியும் அமரர் பொன்னுத்துரை, அமரர் தில்லைநாதன், அமரர் அன்னலக்சுமி, அமரர் நவமணி, அமரர் இராசரத்தினம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2022) வியாழக்கிழமை பி.ப 12.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
கிருஷ்ணபவான் 44 7920[illegible]2982
லோகானந்தன் 44 791631[illegible]
நித்தியானந்தன் [illegible]
குமரசிறீ 94779773551
யோகேந்திரன் 94 774334762

தகவல் :
குடும்பத்தினர்

## மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களமும் இருநாள் பூட்டு

யாழ்., ஜூன் 30

தற்போதுள்ள எரிபொருள் நெருக்கடி காரணமாக மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் இயங்காது என்று மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார். யாழ்ப்பாணம் மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் இயங்காது என்றும் ஏனைய தினங்களில் திறந்திருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Music of Spirit**
Team presents
# ஆத்ம இசை
குழுவினர் வழங்கும்


H. H. SHRI MATAJI NIRMALA DEVI

**Come and Enjoy Your Spirit!**
**Indian Cultural Music and Dance program**

**வருக ஆத்ம அனுபவம் பெறுக!**
**இந்திய கலாச்சார இசை, நடன நிகழ்ச்சி**


**Pt. Dhananjay Dhumal**
International Harmonium Player, Bollywood Music Director


**Anandita Basu**
Sufi, Qawwali, Classical, bhajanand Spiritual Bollywood Singer


**Lata Didi Dhumal**
Famous Bollywood Singer, Folk & Devotional Singer

Get your Self Realization through SAHAJAYOGA
Music with Bhakti, Dance with Bhava. Together, Enlighten our minds, Uplift our souls, and enhances our life.
சகஜ யோகா மூலம் உங்கள் ஆத்ம விழிப்புணர்வு பெறுங்கள் பக்தியோடு கூடிய இசை, பாவனையோடு கூடிய நடனம், ஒன்றிணைந்து, நம் மனதை உள்ளத்தை ஒளிரச் செய்ய,வாழ்வை மேம்படுத்தும் ஆத்மா உயர்விற்காக.

DATE: 2nd & 3rd JULY 2022 TIME: 4:00 PM TO 6:00 PM
VENUE: Ilankai Venthan Hall,
இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி, யாழ்ப்பாணம்.
63, College Road, Neeraviyadi, Jaffna.
Contact & Follow up Meditation: Mr. Vel (075 814 3414)
Theva (077897 0509) +1 201417 2986

Jaffna July 2&3 | Batticaloa July 5 | Kandy July 10 | NuwaraEliya July 12
Bogawanthalawa July 13 | Colombo July 16&17
யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கண்டி, நுவரெலியா, பொகவந்தலாவ, கொழும்பு.

YOU ALL ARE CORDIALLY INVITED
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்
FREE ENTRY
அனுமதி இலவசம்

(nc19841)(2.6)


# மரண அறிவித்தல்

பிறப்பு
08 . 01 . 1931



இறப்பு
26 . 06 . 2022

திருமதி
## தேவதாசன் புஸ்பராசாத்தி மாகிறேற் (ராசாத்தி அம்மா)

2/2, மருதடிலேன், நல்லூர் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தேவதாசன் புஸ்பராசாத்தி மாகிறேற் (ராசாத்தி அம்மா) கடந்த (26.06.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் - தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் தேவதாசனின் அன்பு மனைவியும், பெனடிக்ற் சுமந்திரன் (லண்டன்), சந்திரா (சுவிஸ்), காலஞ்சென்ற அன்ரன் ராஜசூரியர் இந்திரன் (டென்மார்க்), டேவிற் மகேந்திரன் (கொலண்ட்), ஜோர்ஜ்குலேந்திரன் (யாழ்ப்பாணம்), றொய்ஸ் ரவீந்திரன் (பிரான்ஸ்), பேனாட் பாலேந்திரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற கிங்சிலி புவனேந்திரன், சர்மிளா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான செல்லையா செல்லம்மா, ஜோசம் யோகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2022) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்று, அதனைத் தொடர்ந்து புனித திரேசா ஆலயத்தில் பிற்பகல் 3.00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு திருவுடல் கொஞ்சேஞ்சி கல்லறை தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
**077 064 9699, 077 632 5817**

(cs 45404) (2.6)

## கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடமாகாணம்

## 1AB, 1C பாடசாலைகளுக்குரிய அதிபர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

கீழ்க்குறிப்பிடப்படும் வலயக் கல்வி அலுவலகங்களில் உள்ள 1AB, 1C பாடசாலைகளில் காணப்படும் அதிபர் பதவி வெற்றிடங்கள் நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் வடமாகாண கல்வி அமைச்சினால் கோரப்படுகின்றன.

இப்பதவிக்கு வடமாகாணத்தில் கடமையாற்றுகின்ற இலங்கை அதிபர் சேவை வகுப்பு 1 மற்றும் வகுப்பு 2 ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் வலயக் கல்வி அலுவலகங்களில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபாரிசுடன் 2022.07.14 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியதாக **"செயலாளர், கல்வி அமைச்சு, வடமாகாணம், செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்."** என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கு மாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**நிபந்தனைகள்**

01. விண்ணப்பதாரி குறைந்தது 03 வருட காலமேனும் சேவையாற்றக்கூடிய வயதெல்லை உடையவராக இருத்தல் வேண்டும்.
02. இலங்கை அதிபர் சேவை 1 இல் பொருத்தமானவர்கள் தெரிவு செய்யப்படாத சந்தர்ப்பங்களில் மாத்திரம் இலங்கை அதிபர் சேவை 2 ஐச் சேர்ந்தவர்களில் தெரிவு மேற்கொள்ளப்படும்.
03. தற்போது கடமையாற்றும் பாடசாலையில் (1AB, 1C) அதிபராக 03 வருட காலம் சேவையை நிறைவு செய்திருத்தல் வேண்டும்.
04. மாகாணக் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட **"அதிபர் வெற்றிடம் நிரப்புதல்"** சுற்றுநிருப இல 2022/01 இற்கு அமைய தெரிவு மேற்கொள்ளப்படும்.

கல்வி அமைச்சின் நேர்முகத் தேர்வுச் சபையின் நேர்முகப்பரீட்சை புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு மேற்கொள்ளப்பட்டு, சேவை நிலையம் வழங்கப்படும். மேற்படி தெரிவு செய்தல் தொடர்பாக வட மாகாணக் கல்விச் செயலாளரின் தீர்மானம் இறுதியானதாகும்.

**விண்ணப்பம் கோரப்படும் பாடசாலைகள்**

| இல | வலயக் கல்வி அலுவலகம் | பாடசாலை | பாடசாலை வகை |
|---|---|---|---|
| 01 | தென்மராட்சி | யா/மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயம் | 1C |
| 02 | வலிகாமம் | யா/அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் | 1C |
| 03 | மன்னார் | மன்/வேப்பங்குளம் அ.மு.க.பாடசாலை | 1C |
| 04 | | மன்/உயிலங்குளம் றோ.க.த.க.பாடசாலை | 1C |
| 05 | மடு | ஆண்டாங்குளம் றோ.க.த.க.பாடசாலை | 1C |
| 06 | வவுனியா தெற்கு | வ/நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயம் | 1AB |
| 07 | | வ/தாருல் உலூம் மகா வித்தியாலயம் | 1C |
| 08 | வவுனியா வடக்கு | வ/நெடுங்கேணி மகா வித்தியாலயம் | 1AB |

**இ.வரதீஸ்வரன்**
**செயலாளர்**

**2022.06.30**

cr.36284) (2.6)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த (17.05.2022) செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த
எமது அன்புச் செல்வம்

## அமரர் மேகேந்திரன் மகிந்தன்

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (30.06.2022) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளு மாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்

[illegible], கோப்பாய்.

(cs 45351) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜூலை 22...

ஊடகப் பிரதானிகளுடன் நேற்று நடந்திய சந்திப்பில் கருத்துத் தெரிவித்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 24 நாள்களின் பின்னரே நாட்டுக்கு பெற்றோல் கப்பல் வரும் என்று தெரிவித்துள்ளார்.

தற்போது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் 11 ஆயிரம் மெற்றிக் தொன் டீசலும், 5 ஆயிரம் மெற்றிக் தொன் பெற்றோலுமே கையிருப்பில் உள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. நாட்டில் எரிபொருள் விநியோகம் தடைப்பட்டுள்ள நிலையில், நாட்டின் இயல்பு நிலைமை முற்றாக முடங்கியுள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த, சாகல ரத்நாயக்க, ஜூலை 22 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றோல் கப்பலை நாட்டுக்கு வரவழைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஜூலை 11 முதல் 15 ஆம் திகதிக்கு இடையில் கப்பலொன்று வரும் வரை அத்தியாவசிய சேவைகளுக்குத் தேவையான டீசல் மாத்திரமே கையிருப்பில் உள்ளது.

அதேவேளை, 4 மாதங்களுக்குத் தேவையான ஒரு லட்சம் மெற்றிக் தொன் எரிவாயுவை உலக வங்கியின் ஒத்துழைப்புடன் கொள்வனவு செய்வதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளது.

ஜூலை 6, 10, 16, 19, 21, 31 ஆம் திகதிகளில் 33 ஆயிரம் மெற்றிக் தொன் எரிவாயு கிடைக்கவுள்ளது என்று தெரிவித்தார்.

எரிபொருள் தட்டுப்பாடு தொடர்பாக முன்னதாகக் கருத்துத் தெரிவித்திருந்த எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, எதிர்வரும் 10 ஆம் திகதிக்குப் பின்னர் நிலைமை சற்றுச் சீராகும் என்று தெரிவித்திருந்தார். அதுவரை பொதுமக்களுக்கான பெற்றோல் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது என்றும், அத்தியாவசிய சேவையினருக்கே பெற்றோல் விநியோகிக்கப்படும் என்றும் கூறியிருந்தார். தற்போது எதிர்வரும் 22ஆம் திகதி வரை நாட்டுக்கு எரிபொருள் கப்பல் வருவதற்கான சாத்தியங்கள் இல்லை என்று கூறப்படும் நிலையில், நாட்டின் நெருக்கடி நிலைமை தீவிரமடையும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## மத்தியவங்கி...

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதியிடம் பரிந்துரைத்திருந்தார்.

நிதியமைச்சர் என்ற அடிப்படையில் ரணில் விக்கிரமசிங்க இது தொடர்பான கடிதம் ஒன்றை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு அனுப்பியிருந்தார்.

அதை ஏற்றுக்கொண்டுள்ள ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, எதிர்வரும் 4ஆம் திகதிமுதல் நடைமுறையாகும் வகையில் 6 ஆண்டுகளுக்கு நந்தலால் வீரசிங்கவின் பதவிக் காலத்தை நீடித்துள்ளார். (அ-எ-இ)

## கிடைக்கும்...

பொதுமக்களுக்கும் அவற்றை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ்ப்பாணம் மேலதிக மாவட்டச் செயலர் ம.பிரதீபன் தெரிவித்தார்.

எரிபொருள் கையிருப்புக்கள் குறைந்துள்ளதை அடுத்து அத்தியாவசிய சேவை உத்தியோகத்தர்களுக்கே எதிர்வரும் 10ஆம் திகதிவரையில் எரிபொருள் விநியோகிக்கப்படும் என்று இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்திருந்தது. ஆயினும் லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் வழமை போன்று பொதுமக்களுக்கான எரிபொருள் விநியோகம் நடைபெறும் என்று அறிவித்திருந்தது.

பொதுமக்களுக்கான எரிபொருள் விநியோகம் வழமைபோன்று நடைபெறும் என்று லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் அறிவித்திருந்த நிலையில், நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அத்தியாவசிய சேவைப் பணியாளர்களுக்கு மட்டும் எரிபொருள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டதால் குழப்ப நிலைமை ஏற்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்துக்கு அருகில் உள்ள ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்றுக்காலை முதல் பொதுமக்கள் வரிசையில் காத்திருந்தனர்.

ஆயினும் எரிபொருள் விநியோகிக்கப்பட்டபோது அத்தியாவசிய சேவை உத்தியோகத்தர்களுக்கே எரிபொருள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டதை அடுத்து அங்கு குழப்ப நிலைமை ஏற்பட்டது. மக்கள், மாவட்டச் செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் மேற்கொள்வதற்கு முனைந்தனர். அதையடுத்து யாழ்ப்பாணம் மேலதிக மாவட்டச் செயலர் ம.பிரதீபன் சம்பவ இடத்துக்குச் சென்று நிலைமைகளை ஆராய்ந்தார். இறுதியில் ரோக்கன் வைத்திருப்பவர்களுக்கும், அத்தியாவசிய சேவை உத்தியோகத்தர்களுக்கும் எரிபொருள் வழங்கப்பட்டது. ஏனையோர் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த மேலதிக மாவட்டச் செயலர் ம.பிரதீபன், ஐ.ஓ.சி. நிறுவனத்தின் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் கிடைக்கும் சந்தர்ப்பத்தில் அத்தியாவசிய சேவை உத்தியோகத்தர்களுக்கும், பொதுமக்களுக்கும் அவற்றை விநியோகிக் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

இன்று (நேற்று) ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்துக்குக் கிடைத்த எரிபொருள் இராணுவத்தினரால் வழங்கப்பட்ட ரோக்கனைப் பெற்றுக்கொண்டவர்களுக்கும், அத்தியாவசிய சேவை உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்டது. பொதுமக்களுக்கு ஓரிடத்திலும், அத்தியாவசிய சேவை உத்தியோகத்தர்களுக்கு ஓரிடத்திலும் வைத்து எரிபொருள் வழங்கப்பட்டது. ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்துக்குத் தொடர்ந்து எரிபொருள் கிடைத்தால் இந்த நடைமுறையின் கீழ் எரிபொருள் பகிர்ந்தளிக்கப்படும்.

ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் எரிபொருள் விநியோகத்தின்போது மக்களுக்கு வழங்கப்பட்ட எரிபொருள் விநியோக அட்டையில் பதிவுகளை மேற்கொண்டு எரிபொருள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (அ-எ-125-20)

## பெற்றோல்...

இணையத்தின் தலைவர் கெங்காதரன் தெரிவித்தார்.

காரைநகர் மற்றும் கோண்டாவில் இ.போ.ச. சாலைகளில் தனியார் பஸ்களுக்கு டீசல் விநியோகம் நடக்கின்றது. பருத்தித்துறை சாலையில் மட்டும் டீசல் விநியோகிக்கப்படவில்லை என்று பருத்தித்துறை தனியார் போக்குவரத்துச் சங்கத்தின் செயலாளர் க.மனோகரதாசன் தெரிவித்தார்.

டீசல் கிடைக்காததால் தனியார் பஸ்கள் வீதிகளில் நிற்க நேரிடுகின்றது. தங்களுக்குப் பெற்றோல் கிடைக்கும் பட்சத்திலேயே எமக்கு டீசல் வழங்க முடியும் என்று வ.பி.போ.ச. தொழிற்சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக பருத்தித்துறை [illegible] முறையிட்டுள்[illegible] (இன்று) டீசலைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக பருத்தித்துறை வ.பி.போ.ச. சாலை முகாமையாளரைத் தொடர்புகொண்டு கேட்டபோது, 'என்னை அலுவலகத்துக்குள் அனுமதிக்க தொழிற்சங்கம் மறுத்துவிட்டது. தனியார் பஸ்களுக்கு டீசல் வழங்க சாலை முகாமையாளராக நான் அனுமதி வழங்கியுள்ளேன். தமக்குரிய பெற்றோல் வழங்கப்பட்டால் மட்டுமே டீசல் வழங்கப்படும் என்று தொழிற்சங்கத்தினர் கூறியுள்ளனர் என்று அவர் தெரிவித்தார். (அ-எ-125)

## அடுத்த வருடம்...

தெரிவித்துள்ளார்.

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அரச செலவினங்களைச் சமாளிப்பதற்காக கடந்த அரசாங்கம் பெருந்தொகைப் பணத்தை அச்சிட்டிருந்த நிலையில், தற்போதைய அரசாங்கமும் தொடர்ச்சியாக பணத்தை அச்சிட்டு வருகின்றது என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. (அ-எ-இ)

## பெண்ணின்...

அன்புவழிபுரத்தில் நடந்துள்ளது. இந்தச் சம்பவத்தில் 47 வயதான பெண் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

வீட்டின் பூசை அறையில் பெற்றோல் கலன்களில் சேமித்து வைக்கப்பட்டிருந்துள்ளது. நேற்றுக்காலை பூசை அறையில் விளக்கேற்றிய பெண், தீக்குச்சியை வீசி எறிந்தபோது, அது பெற்றோல் கலனில் வீழ்ந்து தீப்பற்றியுள்ளது. பெரும் சுவாலையுடன் பற்றியெரிந்த தீ, பெண்ணின் மீதும் பற்றிக் கொண்டதில் அவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவரின் உடல் திருகோணமலை மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக உப்புவெளிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

நாட்டில் தற்போது பெற்றோலுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், பலர் வீடுகளில் பெற்றோலைக் கலன்களில் சேமித்து வைத்துள்ளனர். பெற்றோலை இவ்வாறு வீடுகளில் சேமித்து வைப்பது அபாயகரமானது என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## தொடரும்...

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களுக்குக் காரணம் என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-22)

**(தொடர்புடைய செய்தி உள்ளே)**

## குழந்தையைப்...

பெண்ணுடன் அவரது வயோதிபத் தாயே உடனிருந்துள்ளார். குழந்தை பிரசவித்த பெண் மருத்துவமனை விடுதியில் இருந்து வீடு செல்ல அனுமதிக்கப்பட்ட நிலையில், அவர் குழந்தையை வயோதிபத் தாயிடம் ஒப்படைத்து விட்டு முச்சக்கர வண்டியை வாடகைக்கு அமர்த்தச் சென்றுள்ளார். எனினும் மருத்துவமனைக்கு அண்மையில் முச்சக்கர வண்டிகளை வாடகைக்கு அமர்த்த முடியவில்லை. அங்குள்ள தரிப்பிடங்களில் முச்சக்கர வண்டிகள் இல்லாததால் ஏ-9 வீதியில் பல மணி நேரம் நின்று வீதியில் செல்லும் முச்சக்கர வண்டிகளை வாடகைக்கு அமர்த்த முயன்றபோதும் அது பயனளிக்கவில்லை.

வீட்டில் இருந்த கணவனுக்கு இது தொடர்பாகத் தகவல் அளிக்கப்பட்டபோதும், அவராலும் உடனடியாக முச்சக்கர வண்டிகளை வாடகைக்கு அமர்த்த முடியவில்லை. பலமணிநேரம் வீதியில் காத்திருந்த பெண், ஏமாற்றத்துடன் மீண்டும் மருத்துவமனை விடுதிக்கே சென்றுள்ளார்.

தற்போது எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், அவசர நிலைமைகளுக்குக் கூட வாகனங்களை வாடகைக்கு அமர்த்த முடியாத நிலைமை காணப்படுகின்றது. அதனால் மக்கள் பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொண்டுள்ளனர். (அ-எ-9)

## திங்கள்...

நடைமுறை இதுவரை கொழும்பில் உள்ள குடிவரவு - குடியகல்வுத் திணைக்களத்தில் மட்டுமே நடைபெற்று வந்தது. பிராந்திய அலுவலகங்களில் 21 நாள்களிலேயே கடவுச் சீட்டு வழங்கப்பட்டு வந்தது.

புதிதாக அமைச்சுப் பதவியேற்றுள்ள பிரபல வர்த்தகர் தம்மிக்க பெரேரா, பிராந்திய அலுவலகங்களில் ஒரு நாளில் கடவுச் சீட்டு வழங்கும் நடைமுறை ஆரம்பிக்கப்படும் என்று தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் பிராந்திய அலுவலகங்களில் ஒரு நாளில் கடவுச் சீட்டு வழங்கும் நடைமுறை ஆரம்பிக்கப்படவுள்ளது என்று அமைச்சர் தம்மிக்க பெரேரா தெரிவித்துள்ளார். (அ-எ-இ)

## எம்மை...

களை நிறுத்த வேண்டி ஏற்படும் என்று வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை சாலை சாரதிகள் மற்றும் காப்பாளர்கள் தெரிவித்தனர்.

கடமைக்குச் செல்வதற்குரிய பெற்றோல் வழங்கப்படவில்லை என்று தெரிவித்து வடக்கு மாகாணத்தில் உள்ள வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் ஏழு சாலைகளும் கடந்த திங்கட்கிழமை தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டன.

அதையடுத்து இந்த விடயத்தில் தலையிட்ட வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் ஆகியோர் சாரதிகள் மற்றும் காப்பாளர்களுக்குப் பெற்றோல் வழங்கப்படும் என்று தெரிவித்திருந்தனர். அதன்படி சில சாலைகளுக்கு பெற்றோலும் வழங்கப்பட்டது. அதையடுத்து தொழிற்சங்க நடவடிக்கைகள் கைவிடப்பட்டு போக்குவரத்துச் சேவைகள் வழமைக்குத் திரும்பியிருந்தன.

பருத்தித்துறைச் சாலையைச் சேர்ந்த சாரதிகள் மற்றும் காப்பாளர்களுக்கு பெற்றோல் இதுவரை வழங்கப்படவில்லை. எனினும் பொதுமக்களின் நலனைக் கருத்திற் கொண்டு அவர்கள் தங்கள் தொழிற்சங்க நடவடிக்கையைக் கைவிட்டிருந்தனர்.

தற்போது நெருக்கடிகளுக்கு மத்தியில் இக்கட்டான நிலைமையைக் கருத்திற் கொண்டு போக்குவரத்துச் சேவைகளைத் தொடர்ந்து முன்னெடுக்கின்றோம் என்று தெரிவித்துள்ள அவர்கள், பெற்றோல் வழங்க நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் எமது தீர்மானத்தில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய நிலைமை தோன்றும் என்று தெரிவித்துள்ளனர்.

வாக்குறுதிகளை வழங்கிய அரச அதிகாரிகளும், ஆளுநரும் அதைச் சரியான முறையில் நிறைவேற்ற வேண்டும் என்று தெரிவித்துள்ள அவர்கள், இந்தநிலைமை தொடர்ந்தால் ஏனைய சாலையைச் சேர்ந்த சாரதிகள், காப்பாளர்களையும் இணைத்து மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கையை நாட வேண்டி ஏற்படும் என்றும் தெரிவித்துள்ளனர். (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (ஒ-இ)

# அத்தியாவசிய பணியாளருக்கு அரசாங்க விடுதி வழங்க முடிவு

## ஆராயுமாறு வடமாகாண ஆளுநர் பணிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 30

வடக்கு மாகாணத்தில் அத்தியாவசிய சேவை வழங்கும் பணியாளர்கள் மாவட்டங்களில் தங்கி நின்று கடமைகளை மேற்கொள்ள அரசாங்க விடுதிகள் வழங்குவது தொடர்பில் ஆராயுமாறு வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா பணித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்தியாவசிய சேவைகளை பணியாளர்கள் அந்தந்த மாவட்டங்களில் தங்கி நின்று வினைத்திறனுடன் பணியாற்ற அரசாங்க விடுதிகள் வழங்கும் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

இதேபோல் வடக்கு மாகாணத்தில் அத்தியாவசிய சேவைகளை மேற்கொள்ளும் உத்தியோகத்தர்கள் சென்றுவர மாகாண சபையிலுள்ள பேருந்துகளைப் பயன்படுத்தவும் குறைந்த கட்டணத்தில் குறித்த பஸ் சேவையை நடைமுறைப்படுத்தவும் ஆளுநரால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவை தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும் என்று ஆளுநர் அறிவுறுத்தியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-27)

# கொடுங்கோன்மைக்கு எதிராக விரைவில் மக்கள் பேரெழுச்சி

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 30

அரசாங்கம் நாட்டை அவல நிலையை நோக்கியே இட்டுச் சென்றுள்ளது. இதற்கு எதிராக ஜனநாயக ரீதியான மக்கள் எழுச்சி உருவாக்கப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத் தில் நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்களின் இருக்கைகளைப் பாதுகாப்பது மட்டுமே அரசாங்கத்தின் அத்தியாவசிய சேவையாகும். இவ்வாறான நிலையால் தான் நாட்டு மக்கள் துன்பங் களை அனுபவித்து வருகின்றனர். செயற்பட முடியாத அரசாங்கம் பதவி விலக வேண்டும். அதன் பின்னர் ஐக்கிய மக்கள் சக்தி இந்நாட்டை கட்டியெழுப்பும் - என்றார். (ம)




**TECHNO WORLD**

தொழில்நுட்ப கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்

A/L 2024 புதிய கல்வியாண்டு

A/L 2022 DAY CLASS

( இம் முறை பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்குரியது)

● காலம் - 03.07.2022 ● நேரம் - 8.30 AM

தொடர்புகளுக்கு - 077 017 5346

# அரசாங்கத்தின் மீது மக்கள் கடும் கோபம்

## கறுப்பு ஜூலைக்கும் வாய்ப்பு நளின் எம்.பி. எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 30

நாட்டு மக்கள் அரசாங்கத்தின் மீதும் ராஜபக்சக்கள் மீதும் கடும் கோபம் கொண்டுள்ளனர். பொறுமையிழந்துள்ள மக்கள் எடுக்கும் தீர்மானங் களால் மீண்டுமொரு கறுப்பு ஜூலை பதிவாகக் கூடிய வாய்ப்புக் காணப்படுகிறது என்று தெரிவித்தார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரான நளின் பண்டார.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கோத்தாபய நாட்டின் சாபமாவார். அவர் பதவி விலகினால் மாத்திரமே நாட்டுக்கு விடுக்கப்பட்டுள்ள சாபம் நீங்கும். தற்போது கிணற்றுக்குள் வசிப்பது எவ்வாறு என்பதை அரசாங்கம் கூறிக் கொண்டிருக்கிறது. ஆனால் மக்களின் தேவை அதுவல்ல. கிணற்றுக்குள்ளிலிருந்து வெளியேறவேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும். அதற்கு கோத்தாபய தலைமையிலான அரசாங்கம் பதவி விலகி தேர்தலை நடத்தவேண்டும். அவ்வாறில்லை எனில் சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க வேண்டும். ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவியேற்று ஒன்றரை மாதங்கள் கடந்துள்ள போதிலும், எவ்வித சர்வதேச உதவிகளும் கிடைக்கப் பெறவில்லை. மக்கள் பொறுமையிழந்துள்ளனர். மதத் தலைவர்களுக்கு கூட கட்டுப்படும் நிலைமையில் அவர்கள் இல்லை. ஆட்சியாளர்கள் மீது கடும் கோபத்திலுள்ளனர். மக்கள் அடுத்து என்ன தீர்மானத்தை எடுப்பார்கள் என்று கூறமுடியாது. அடுத்த மாதம் கறுப்பு ஜூலையாக பதிவாகக் கூடிய நிலைமையே காணப்படுகிறது. இதற்கு இடமளித்து விடவேண்டாம் என்று அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம் - என்றார். (ம)

## பொருண்மியம் நலிந்தவர்களுக்கு நல்லூர் பிரதேசசபையால் உதவி

யாழ், ஜூன் 30

பொருண்மியம் நலிந்தவர்களுக்கு நல்லூர் பிரதேசசபையால் வாழ்வாதார உதவிகள் பிரதேசசபையில் கடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்டன.

நல்லூர் பிரதேசசபையின் 6.6 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

பொருண்மியம் நலிந்த 12 குடும்பங்களுக்கு சைக்கிள்களும், சிறப்புத்தேவையுடைய 16 பேருக்கு கட்டில்களும் , சிறப்புத்தேவையுடைய 3 சிறுவர்களுக்கு வோக்கர்களும், பொருண்மியம் நலிந்த 3 குடும்பங்களுக்கு கோழிக்கூடுகளும் கோழிக்குஞ்சுகளும் சிறப்புத்தேவையுடைய ஒருவருக்கு சைக்கிளும் வழங்கப்பட்டன.

(ஒ-14,125)

# மரண அறிவித்தல்

தோற்றம்
29 . 10 . 1934



மறைவு
29 . 06 . 2022

## திருமதி இராமலிங்கம் நல்லம்மா

யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராமலிங்ம் நல்லம்மா அவர்கள் நேற்று (29.06.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா நாகமுத்து தம்பதியரின் அருமை மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பர் அன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் இராமலிங்கம் (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்) அவர்களின் துணைவியாரும் சண்முகலிங்கம் (மனித வள முகாமையாளர் - வீனஸ் வைத்தியசாலை - யாழ்ப்பாணம்), இராசலிங்கம் (ஆசிரியர் - யா/நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயசாந்தினி (ராசாத்தி), றஸனிகா (பவி) ஆகியோரின் அன்பு மாமியாரும் அபிராமி, கீர்த்திகன், பாமினா, நிலக்ஷி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2022) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

520, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

076 255 5529
077 086 9315
077 191 2585

தகவல் :
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.06.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.